Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 32 திங்கட்கிழமை (17.08.2015) | பக்கங்கள் 20 | ஓசை – 320

# தமிழரை மீண்டும் காட்டிக்கொடுத்து

# சம்பந்தர் அடித்தார் பல்டி

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொள்வதற்கு கூட்டமைப்பு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கும் என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் கூறியிருப்பது தமிழ் மக்களைக் காட்டிக் கொடுக்கும் கபடத்தனமான செயல் என நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுவரை தமிழ் மக்கள் வழங்கும் பெரும்பான்மை ஆதரவை மத்திய அரசோடு பேரம் பேசும் சக்தியாகப் பயன்படுத்துவோம் என்று மேடைகளில் உணர்ச்சிப் பெருக்கோடு கூறிய சம்பந்தர் தேர்தலுக்கு முதல் நாள், ஐக்கிய தேசியக் கட்சியின் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்காக தமிழ் மக்கள் வழங்கும் வெற்றியை ஒப்படைப்போம் என்று கூறுவது வேடிக்கையாகும்.

சம்பந்தரின் கூற்றைப் பார்க்கும்போது, தேர்தல் முடிவுகளுக்கு முன்னரே, தமிழ் மக்களை ஏமாற்றிப் பெற்றுக் கொள்ளும் வெற்றியை உங்களுக்கு அடகு வைக்கின்றோம் என்ற ஒப்பந்தமொன்றை கூட்டமைப்பினர் செய்து கொண்டுள்ளனர் என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது.

ஏற்கனவே நல்லாட்சிக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றோம் என்று கூறிக் கொண்டு, தமிழ் மக்களுக்கு எவ்விதமான நன்மைகளையும் பெற்றுக் கொடுக்காமல் தமக்கு சொகுசு வாகனங்களையும், சொகுசு வீடுகளையும், பெருந்தொகைப் பணத்தையும் பெற்றுக் கொண்டிருந்தனர் என்பதை தமிழ் மக்கள் மறந்துவிடவில்லை.

இந்த நிலையிலேயே தமது நலன்கள் சார்ந்த மீண்டுமொரு ஒப்பந்தத்துக்கு அமைய எதிர் காலத்திலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கப்போவதாக சம்



பந்தர் கூறியிருக்கின்றார். ஆதரவை வழங்க தமிழ் மக்களின் அபிலாஷைகள் உள்ளடங்கிய

(19)ஆம் பக்கம் பார்க்க

## மாவையின் சின்ன வீடும் பெரிய வீடும்





(யாழ்ப்பாணம்)

72 வயதான மாவை சேனாதிராஜா தனது சின்ன வீடாக கருதி தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு வரும் பகுதியாகவே யாழ்ப்பாணத்தைக் கருதியுள்ளார்.

இவரது பெரிய வீடு இந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ளது. அதன் புகைப்படம் இங்கு தரப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தை தனது சின்னவீடு உள்ள இடமாகக் கருதும் மாவை சேனாதிராசா 1989 ஆம் ஆண்டில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார்.

இவர் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து வரும்

(19)ஆம் பக்கம் பார்க்க


## கூட்டமைப்பின் தில்லு முல்லு

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவுள்ள தேர்தலை முன்னிட்டு கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக வேட்பாளர்கள் இருவர் வாக்காளப்பெருமக்கள் வாக்களிக்கச் செல்லும்போது தமது இலக்கங்களை ஞாபகப்படுத்த கைக்கு அடக்கமான ஒன்றரை இலட்சம் பிரசுர

(19)ஆம் பக்கம் பார்க்க

## சரஸ்வதியின் வீணைக்கும் வந்தது சோதனை



(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிலுள்ள பாடசாலைகளுக்கு முன்னால் கல்வித் தெய்வமாம் சரஸ்வதி தனது கையில் வீணையுடன் இருக்கும் உருவச் சிலையை தேர்தல் கண்காணிப்பாளர்கள் நேற்றையதினம் உருமறைப்பு செய்துள்ளனர். கூட்டமைப்பின்

(19)ஆம் பக்கம் பார்க்க

## சுதந்திரதின நிகழ்வில் சம்பந்தன் பங்கேற்றது சரியா?

### கேட்கிறார் கவிஞர் காசிஆனந்தன்

(யாழ்ப்பாணம்)

2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்த நிலையிலும் கூட தமிழருக்கு எவ்வித சுதந்திரமும் கிடைக்காத நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மட்டும் எவ்வாறு இலங்கையின் சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொள்ள முடியுமென கேள்வியெழுப்பியுள்ளார கவிஞர் காசிஆனந்தன் இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்கக் கொடியை எதிர்த்தமைக்காக திருமலை நடராஜன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார். ஆனால் அதே திரு

(19)ஆம் பக்கம் பார்க்க

## மதிலுடன் மோதியது வான்; இருவர் பலி

(சாவகச்சேரி)

வீட்டு மதிலுடன் மோதி வான் விபத்துக்குள்ளானதில் அந்த வானில் பயணித்த இருவர் மரணமடைந்துள்ளனர்.

ஏ-9 வீதியில் மீசாலை - புத்தூர் சந்திக்கு அருகாமையில் நேற்று அதிகாலை 3.20 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த விபத்துச் சம்பவத்தில் வான் சாரதி உட்பட இருவர் மரண

(19)ஆம் பக்கம் பார்க்க

## சரிந்த செல்வாக்கிற்கு நாட்டு வெடிகுண்டு

### கூட்டமைப்பின் புதுயுக்தி

(யாழ்ப்பாணம்)

தமது செல்வாக்கு சரிந்து வருவதனைப் புரிந்து கொண்டுள்ள கூட்டமைப்பினர் அதனை மீளவும் தூக்கி நிறுத்துவதற்கு வன்முறையை கையாண்டு மீளவும் தம்மை அச்சத்தில் ஆழ்த்தும் செயற்பாட்டில் ஈடுபட்டிருப்பதாக தமிழ் மக்கள் தமது விசனத்தையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ளனர்.

இதன் தொடர்ச்சியாகவே நேற்று முன்தினம் யாழ்.மாட்டின் வீதியிலுள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகம் மீது நாட்டு

(19)ஆம் பக்கம் பார்க்க

# புனர்வாழ்வு பெற்றவருக்கு வாழ்வாதார உதவி வழங்கல்



இந்த முயற்சியில் ஜேர்மனியிலுள்ள கையில் புறோன் கந்தசாமி கோவில் அங்கவீன முற்ற புனர்வாழ்வு பெற்ற ஒருவருக்கு வாழ்வாதரத்திற்கான உதவியை வழங்கியுள்ளது.

கோவில்களுக்கு வந்த பக்தர்களிடம் இருந்து சேர்ந்த பணத்தில் புனர்வாழ்வு பெற்றோர் மரக்கறி வியாபாரம் செய்வதற்காக மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கிக் கொடுத்துள்ளனர்.

மற்றும் மரக்கறி வாங்குவதற்கான பணத்தினை 'உதவும் இதயங்கள் ஜேர்மனி' வழங்கியுள்ளது.

இதே போன்று புலம் பெயர் நாடுகளில் இருக்கும் கோவில்களும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து உதவுவதற்கு முன்வருவார்களேயானால் எமது மக்களை தலை நிமிர வைக்க முடியும்.

யுத்த வடுக்களுடன் வாழும் புனர்வாழ்வு பெற்றோரின் வாழ்க்கை மிகவும் பாதிப்புக்குள்ளான நிலையில் உள்ளது. திறமை, ஆளுமை, தன்னம்பிக்கையுள்ளவர்களாக இருந்தும் அங்கவீனமுற்ற நிலையில் இருப்பதால் வாழ்வாதாரத்தை தேடமுடியாமல் உள்ளனர்.

பல இன்னல்கள் சித்திரவதைகள் தடுப்பு முகாம்கள் என்று நரக வாழ்வில் இருந்து மீண்டு வந்தும் குடும்ப வாழ்வை சுமப்பதற்கு தொழில் முயற்சி மூலம் வருமானத்தை தேடுவதற்கு உதவி செய்ய யாரும் முன்வருவார்களா? என்ற ஏக்கத்துடன் பல புனர்வாழ்வு குடும்பம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

இவ்வாறான நிலையில் புனர்வாழ்வு பெற்றோரின் குடும்பங்களுக்கு புலம் பெயர்நாடுகளில் இருக்கும் சில கோவில்கள் முன் வந்து உதவிகள் பல செய்து கொண்டிருக்கின்றன

# பாலங்களின் விபரம் திரட்டல்

வடமாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கு உட்பட்ட வீதிகளில் அமைந்துள்ள பாலங்களின் விபரங்களை வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு செயலரினால் கோரப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள சகல நகரசபைகள் பிரதேச சபைகளிடம் இருந்து விபரங்கள் முழுமையாக கோரப்பட்டுள்ளன.

கிராமிய பாலங்களின் நீளம், அகலம் அமைந்துள்ள இடம், வரைபடம் போன்ற விபரங்களுடன் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

# நெல் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலக விவசாயக் கிளையினால் பெரும் போகத்தில் விவசாயிகளிடமிருந்து கூட்டுறவுச் சங்கங்களினூடாகக் கொள்வனவு செய்யப்பட்ட இருப்பிலுள்ள நெல் விற்பனை செய்யப்படவுள்ளது.

இவ்வருடம் ஆரம்பத்தில் கொள்வனவு செய்யப்பட்டு உடுப்பிட்டி, மானிப்பாய் மற்றும் வலிகாமம் கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இருப்பாகவுள்ள நெல்லே விற்பனை செய்யப்படவுள்ளது.

குறித்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் 44 ஆயிரத்து 445 கிலோ கிராம் நெல் இருப்பாகக் காணப்படும் நிலையிலேயே இவை விற்பனை செய்வதற்கு யாழ்.மாவட்ட செயலக விவசாயக் கிளை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

# இ.போ.ச மீது நேற்றிரவு இனந்தெரியாதோர் தாக்குதல்




(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்து சபை பேருந்து மீது திருநெல்வேலி பகுதியில் வைத்து இனம் தெரியாத நபர்கள் கல்வீசி தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.


அம்பாறைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் சேவையில் ஈடுபடும் பேருந்தின் மீதே நேற்றிரவு 8.30 மணியள வில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுளளது.

அம்பாறையில் இருந்து பயணிகளை ஏற்றி வந்து யாழ்.நகர் பகுதியில் இறக்கிவிட்டு தரிப்பிடத்திற்காக பலாலி வீதியின் ஊடாக கோண்டாவில் டிப்போவிற்கு சென்று கொண்டிருந்த வேளை திருநெல்வேலி சந்திக்கு அருகில் வைத்தே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பலாலி வீதியில் திருநெல்வேலி சந்தியை நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த இரு நபர்களே பேருந்தின் மீது கல்வீசி தாக்குதல் மேற்கொண்டு விட்டு தப்பி சென்றதாக பேருந்தின் சாரதி தெரிவித்தார்.

இச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் போலீசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

# உணவில் மட்டைத்தேள் ஹோட்டலுக்கு எதிராக வழக்கு

## வவுனியாவில் சம்பவம்



வவுனியா, மில்வீதி சந்தியில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றினால் வழங்கப்பட்ட உணவுப் பொதியில் விசப்பூச்சியான மட்டைத்தேள் இறந்த நிலையில் காணப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, மில்வீதி சந்தியில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் உணவுப் பொதியைப் பெற்ற ஒருவர் அதனை வீட்டில் சென்று பிரித்து சாப்பிட்ட போது அதனுள விசப் பூச்சியான மட்டைத்தேள் இறந்த நிலையில் காணப்பட்டமையை கண்டுள்ளார்.

இதனையடுத்து சுகாதார பரிசோதகர்களிடம் தெரியப்படுத்தியதை அடுத்து குறித்த ஹோட்டல் சோதனை செய்யப்பட்டதுடன், ஹோட்டலுக்கு எதிராக கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா நீதிமன்றில் வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

# சட்டவிரோத மணல் அகழ்வு விவசாய நிலங்கள் பாதிப்பு

## தட்டுவன்கொட்டி மக்கள் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பன்னங்கண்டி மற்றும் தட்டுவன் கொட்டிப் பகுதியில் தொடர்ச்சியாக சட்ட விரோத மணல் அகழ்வு இடம்பெற்றுவருவதால் பெருமளவான விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாக அப் பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த பகுதிகளில் உள்ள பயிர்ச் செய்கை நிலங்களில் இரவு வேளைகளிலும் பகல் வேளைகளிலும் பாரிய மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் இதனால் பயிர்ச் செய்கை நிலங்கள் பாதிக்கப்பட்டு எதிர்காலத்தில் எந்தவொரு பயிர்செய்கைகளையும் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. எனவே, இதனைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுககவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, குறித்த விடயத்தில் விசேட நடவடிக்கை மூலம் கவனம் செலுத்தப்பட்டு சட்டவிரோத மணல் அகழ்வுகளைத் தடுக்கும் வகையில் பலர் கைது செய்யப்பட்டு தண்டனைகள்வழங்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






நேற்று இடம்பெற்ற நீர்வேலி வடக்கு பரலோகா மாதா அன்னையின் திருவிழாவில் திருப்பலி ஒப்புக் கொடுத்ததுடன் திருச்சொருப பவனியும் மிகச் சிறப்பாக இடம்பெற்றது. (85)

# இரணைமடு குள அபிவிருத்தி காலத்தின் கட்டாய தேவை

## விவசாய அமைப்புக்கள் வலியுறுத்து



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மக்களின் நீர்த்தேவை பூர்த்தியை உறுதிப்படுத்தியதன் பின்னரே குடாநாட்டுக்கான நீர் விநியோகம குறித்து கவனம் செலுத்த முடியுமென இம்மாவட்டத்தின் விவசாய அமைப்புக்கள். மற்றும் சிவில் அமைப்புக்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

மழைகுறைவான காலங்கள் மற்றும் வரட்சி மிகுதியான காலப்பகுதிகளில் பயிற்செய்கை மற்றும் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்வதில் இம் மாவட்ட மக்கள் அவ்வப்போது நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதையும் இங்குள்ள வெகுஜென அமைப்புக்களின் பிரநிதிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நீண்ட போர்ச் சூழலில் இம் மாவட்டத்திலுள்ள நூற்றுக்கும் அதிகமான சிறு குளங்கள் மற்றும் நீர் நிலைகள் புனரமைக்கப்படாத நிலையில் இங்குள்ள நன் நீர் நிலைகள் யாவும் உவர் தன்மை கொண்டதாக மாறிவருவதையும் இப்பகுதி விவசாய அமைப்புக்கள் கவலையுடன் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்த ஆபத்தான போக்கினை தடுத்து நிறுத்துவதற்கு இந்த நீர் நிலைகளை புனரமைப்பது மட்டுமன்றி இரணைமடுக்குளத்து நீரை இந்த நீர் நிலைகளுக்கும் கிடைக்க செய்வதன் மூலம் தரைகீழ் நன்நீர் வளத்தை பாதுகாக்க முடியும் என்ற கருத்தையும் இம் மாவட்ட விவசாய அமைப்புக்கள் முன்வைத்துள்ளன.

மேலும் இம் மாவட்டத்தின் இதுபோக நெற் செய்கைக்கென 20 ஆயிரம் ஏக்கர் நிலம் இலக்காக கொள்ளப்பட்டுள்ள நிலையில் இதில் பாதியளவு நெற்ச் செய்கை நிலங்களுக்கே இரணைமடுகுளத்து நீர் போதியதாக இருப்பதையும் இங்குள்ள கமக்காரர் அமைப்புக்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றன.

இதனைவிட இம்மாவட்டத்தின் மேற்குப்பகுதியான பூநகரியின் பெரும்பாலான காரையோர வயல் நிலங்கள் நீண்ட காலமாக உவர் நீர்தடுப்பு அணை அமைக்கப்படாததன் காரணமாக கடல் நீர் உட்புகுந்து உவர் நிலங்களாகும் ஆபத்து உருவாகி இருப்பதையும் இவ் விடத்தில் சுட்டிக்காட்ட வேண்டி இருக்கிறது.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட மக்களின் நீர்த்தேவையை இரணைமடுக்குளத்தின் நீர் விநியோகம் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் அதன் அடிப்படையில் இக்குளத்து நீரை குடநாட்டுக்கு அனுப்பி வைக்க முடியும் என்கிற கேள்வியும் குறிப்பாக இம் மாவட்டத்தின் விவசாய சம்மேளனங்கள் மத்தியில் இப்போது எழுந்திருக்கிறது.

குடநாட்டுக்கு இக்குளத்து நீரை விநியோகிக்க இங்குள்ள அரசியல் தலைமைத்துவங்கள் தமக்குள்ளே முட்டி மோதிக் கொண்டதில் இந்த நீர் விநியோகம் தடைப்பட்டது மட்டுமன்றி இக்குளத்தின் நீர் தாக்கும் பரப்பளவை விஸ்தரிப்பதற்கான திடடங்களும் இடைநடுவில் கைவிடப்பட்டிருப்பது இம் மாவட்ட மக்களை பெறுத்தவரை மிகவும் கவலை தரும் செய்தியாகும்.

அனைத்து நிலமைகளையும் கவனத்திலெடுத்து இரணை மடு குளத்து நீரை யாழ்ப்பாணத்திற்கு விநியோகிப்பதற்கு முன் இக் குளத்தின் நீர் தேங்கு பரப்பளவை விஸ்தரித்து இம் மாவட்டத்தின் பயிற்ச் செய்கை நடவடிக்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்றை அடையாளப்படுத்திய பின்பே இந்நீரை வெளிமாவட்டத்துக்கு அனுமதிக்க முடியும் என்கிற கருத்து இம் மாவட்ட விவசாயிகள் மத்தியில் பலமாக வெளியிடப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தின் தரை கீழ் நன்நீரை பாதுகாப்பதில் இரணைமடுக் குளத்தின் பங்களிப்பு மிக அவசியமாக உணரப்பட்டிருப்பதால் அதற்கான திட்டங்களை முதலில் அடையாளப்படுத்த வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டிருப்பதையும் இங்கு சுட்டிக்காட்டவேண்டி இருக்கிறது.

இரணைமடுக் குளத்து நீரை குடாநாட்டுக்கு விநியோகிப்பதில் கவனம் செலுத்தும் சிவில மற்றும் அரசியல் தலமைகள் அனைத்தும் மேற் சொன்ன விடயங்களை கவனத்திலெடுத்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

யாழ்.கிளிநொச்சி மாவட்ட மக்களின் நீர்த்தேவையை பெறுத்தவரை இது வடக்கில் உருவாக இருக்கும் புதிய அரசியல் தலைமைத்துவத்துக்கு காலம் விதித்திருக்கும் கட்டாய பணி.

இப்பணியை சிறப்பாக முன்னெடுப்பதை பொறுத்தே இந்த அரசியல் தலைமைகளின் வரலாற்று அவசியம் இம்மாவட்ட மக்களுக்கும் எதிர்காலத்தில் உணரப்படும்.

## தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் முல்லை மாவட்டத்தில் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறுகின்ற பொதுத் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக முல்லைதீவு மாவட்ட அரசாங்க அதிபரும், தெரிவத்தாட்சி அதிகாரியுமான ரூபாவதி கேதிஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் நேற்று காலை முதல் வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகளும் அதிகாரிகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது 63920 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதுடன், வாக்களிப்பதற்காக 130 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

# மணல் விநியோகம் தடைப்பட்டதில் நிர்மாணப்பணிகளில் பெரும் பின்னடைவு

## உடன்மாற்று ஏற்பாட்டுக்கு பொதுமக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பதற்குத் தேவையான மணலை பெற்றுக் கொள்ள முடியாமற்போனதில் இத்துறை சார்ந்த முயற்சியாளர்கள் மற்றும் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் மட்டுப்படுத்திய அளவிலேனும் இந்த மண்ணைப்பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இருந்தமையால் குடாநாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திக் கொள்வதற்கான நிர்மாண வேலைகளை ஓரளவுக்கேனும் முன்னெடுக்கக் கூடியதாக இருந்தது.

இந்த நிலையில் கடந்த ஜனாதிபதி தேர்தலுக்குப் பிறகு இந்த மணல் விநியோகத்தில் ஈடுபட்டிருந்த நிறுவனங்கள் தமது நடவடிக்கைகளை தொடர முடியாத ஒரு நிலமைக்குள் தள்ளப்பட்டதை அடுத்தே இம் மணல் நெருக்கடியை குடாநாட்டு மக்கள் தற்போது எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த மணல் விநியோகம் தடைப்பட்டதில் இத் தொழிலை நம்பி இருக்கும் வாகன உரிமையாளர்கள், இவர்களை சார்ந்துள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இப்போது பெரும் தொழில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளமை கவனத்திற்குரிய ஒரு பிரச்சினையாகும்.

தற்சமயம் குடாநாட்டில் வடமராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், குடத்தனை கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகிய இரு அமைப்புக்கள் மாத்திரமே இந்த மணல் விநியோகத்தை மட்டுப்படுத்திய அளவில் விநியோகிப்பதற்கான அனுமதியை பெற்றுக் கொண்டுள்ளன. இவர்களால் மணல் தேவையை பூர்த்தி செய்யக் கூடியதாக இல்லை என்பதை இங்கே கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த அனுமதியைக் கொண்டு இப்போது குடாநாட்டில் மொத்தமாக உள்ள மணல் தேவையில் மிகவும் குறைவான அளவு மணலையே இந்த அமைப்புக்கள் பூர்த்தி செய்யக்கூடிய தாக இருப்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட வேண்டி இருக்கிறது.

இந்த நிலையில் கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் விநியோகிக்கப்பட்ட மணலையாவது தற்சமயம் பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்பதை யாழ்.மாவட்டத்தில் செயற்பாட்டில் இருக்கும் சிவில் அமைப்புக்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள் தற்போது வலியுறுத்தியுள்ளனர்.

இன்று நடைபெறும் பொதுத்தேர்தலை அடுத்து உருவாகும் புதிய ஆட்சி நிர்வாகத்திலாவது இந்த மணல் விநியோகப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு கிட்ட வேண்டுமென்பதையும் இப்பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதில் குறிப்பிட வேண்டிய பிரதான அம்சம் இந்த நிர்மாண வேலைகளை சார்ந்த தொழிலாளர்களை இப்போது



பெரும் வேலையின்மை பிரச்சினையை எதிர்கொண்டிருப்பதாகும். அன்றாடம் காய்ச்சிகளான இவர்களது குடும்பங்கள் மாற்றுத் தொழிலெதனையும் தேடிக் கொள்ள முடியாத நிலையில் நாளாந்த உணவுத்தேவையைக் கூட பூர்த்தி செய்யமுடியாத அளவுக்கு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன.

கூடவே இத்துறைசார்ந்த முதலீட்டாளர்களும் தமது நிர்மாண நடவடிக்கைகளை தொடர முடியாமல் போனதில் குறிப்பாக குடாநாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திக் கொள்வதற்கான அனைத்து முயற்சிகளும் முடக்கப் பெற்றிருப்பதையும் இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது.

மணல் விநியோகத்தை தொடர்புபடுத்தி தொழில் மற்றும் அபிவிருத்தி சார்ந்து ஏற்பட்டுள்ள அனைத்து நெருக்கடிகளையும் கவனத்திலெடுத்து சம்பந்தப்பட்ட அமைப்புக்கள், அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை சீராக முன்னெடுக்க வேண்டுமென்பதை இத்துறை சார்ந்த முயற்சியாளர்கள் தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பதவியும் பணமும் பண்புள்ளவனைக்கூட பாழ்பட்டவனாக மாற்றிவிடுகின்றன -அன்புவழியூர்க்கவிராயர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மக்கள் மீதேறிச் சவாரி தொடர்வதா?

இதுவரை காலமும் எதிர்ப்பரசியல் மூலம் தமிழ் மக்களுக்கு வெறும் உணர்ச்சியாவேசத்தை ஊட்டி பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுவந்த கட்சியினர், இம்முறை தோல்விப் பயம் எழுந்ததன் காரணமாக பதற்றத்தில் என்னென்னமோ தகிடுதத்தங்களைச் செய்து அம்பலப்பட்டுப் போயுள்ளனர்.

இராணுவம் தாக்குகிறது என்றோ, பரப்புரை செய்யவே விடாமல் தடுக்கிறார்கள் என்றோ, அரசாங்கத்தை எதிர்த்தோ எதுவும் பேசமுடியாமல் இக்கட்டான நிலைமைக்குள் தள்ளப்பட்டிருந்ததால், மிகமிகச் சோர்வாகவே அக்கட்சியின் பரப்புரைகள் நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றன.

தொடர்ந்து ஏமாற்றி வருகிறார்கள் என்ற அபிப்பிராயம் மக்களிடம் பரந்தளவில் இம்முறை தோன்றியிருந்தது. அதனால் வெறுப்பில் வாக்களிக்காமல் விடுவோர் தொகை அதிகமாகலாம் என்றே ஊடகங்களும் அவதானிகளும் சுட்டிக்காட்டினார்கள்.

இந்த பயம் – பதற்றத்திலேயே மக்களுக்கு ஆவேச உணர்ச்சியை உருவாக்குவதற்காக நாட்டு வெடிகுண்டுகளைக் கூட ஆங்காங்கே வெடிக்க வைத்து பீதியை ஊட்டும் அளவிற்கு நிலைமை சென்றிருக்கிறது.

வெற்றிவாய்ப்பை அறவே இழந்துவிட்டவராகக் கருதப்படும் அந்த “ஊடகப் போராளி” இன்று வாக்குச் சாவடிகளின் அருகில் விநியோகிப்பதற்காக ஒரு லட்சம் வாக்களிப்பு மாதிரி அட்டைகளை அச்சிட்டு வைத்திருப்பதாக நேற்று தகவல்கள் வெளிவந்திருந்தன.

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தமிழ்ப் பிரமுகர்களின் படங்களைப் போட்டு, அவர்களின் ஆதரவெல்லாம் தமக்கே என்றொரு வேட்பாளர் சோடித்த மோசடியான விளம்பரங்களும் இம்முறை வெளியாகி அம்பலப்பட்டு மக்களின் அருவருப்பைச் சம்பாதித்தது.

அந்த விளம்பரத்தில் படமாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தவர்கள் எல்லாம், தங்கள் அனுமதி இன்றியே தங்களை வைத்து வாக்குக் களவாடப் பார்க்கிறார்கள் என்று அவரவர் முகநூலில் பதிவு போடுமளவுக்கு இத்தேர்தல் ஒரு அணியினரின் தடுமாறக் களமாகியது.

அதேசமயம் வழக்கம்போல “தமிழ் சிவில் சமூகம் எங்களை ஆதரிக்கிறது” “யாழ் பல்கலைக்கழக சமூகம் இன்னாருக்கே வாக்களிக்கச் சொல்கிறது” என்றும் விளம்பரங்கள் மற்றும் செய்திகள் பிரசுரிக்கப்பட்டன.

தமிழ் சிவில் சமூகம் என்பது எத்தனை பேர்? பல்கலைக்கழக சமூகம் என்றால் அதில் எத்தனை பேர் அடக்கம் என்பதையெல்லாம் தெரிவிக்காமலே அனைத்துக்கும் தாங்களாகவே உரிமை கோரிக் கொள்ளும் அராஜகத்தை இம்முறையும் அவர்கள் விடவில்லை.

உங்கள் கருத்தை ஏற்காத தமிழ் சிவில் சமூகத்திலுள்ள மற்றவர்கள் மக்கள் இல்லையா? நீங்கள் சொல்வதை ஒப்புக் கொள்ளாதவர்கள் பல்கலைக்கழக சமூகத்தில் அங்கமாக இருக்க முடியாதா?

மற்றவர்களை எல்லாம் கிள்ளுக்கீரையாக நினைக்கும் ஏகப்பிரதிநிதித்துவ அகம்பாவமும் இன்னும் இவர்களை விட்டுத் தொலையவில்லை. அதனால்தான் மாற்றுக் கட்சிகளையெல்லாம் “அவர்கள் உதிரிகள்; அவர்களைத் தூக்கிவீசுங்கள்” என்று திமிர்த்தனத்தோடு இவர்களால் பேசமுடிந்தது.

காலங்காலமாக இந்தத் திமிர்த்தனமே தமிழ் மக்கள் மீதேறிச் சவாரி செய்து வருகிறது. இதனால் மக்கள் தொடர்ந்தும் நசுங்கிச் சுமை சுமக்கிறார்களே தவிர, இவர்களால் எந்தவொரு நல்ல நிலைமையையும் மக்கள் பெற்றதில்லை.

தமிழ்மக்கள் கனகாலமாகத் தங்கள் மீதுள்ள நுகத்தடியை அகற்றித் தங்களைக் காப்பாற்றிக் கொள்வார்களா என்பது நாளை தெரிந்துவிடும். - ஆசிரியர்

# புற்றுநோயாளிகளின் சிகிச்சைக்காக

# விரிவான தேசிய வேலைத்திட்டம்

## ஜனாதிபதியுடன் விரிவாக ஆராய்வு

(கொழும்பு)

நாட்டில் உள்ள புற்று நோயாளிகளின் சிகிச்சை நடவடிக்கைகளுக்காகவும் அவர்களது வாழ்க்கைப்பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவும் விரிவான தேசிய வேலைத்திட்டம் ஒன்றை நடை முறைப்படுத்த அரசாங்கம் கவனம செலுத்தி உள்ளது.

இலங்கை புற்றுநோய் விசேட வைத்தியர்களின் சங்கம் கடந்த 14 ஆம் திகதி முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்த போது இது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

புற்று நோயாளிகளின் நலனோம்புகை நடவடிக்கைகளுக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுகாதார அமைச்சராக இருந்தபோது பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்த போதும் அப்போதைய அரசாங்கத்தின் கீழ் அவை இடைநடுவே கைவிடப்பட்டன. அந்த நடவடிக்கைகளை மீண்டும் செயற்படுத்தி நாட்டில் உள்ள புற்று நோயாளிகளின் நலனோம்புகை நடவடிக்கைகளுக்காக ஒரு அரசு என்ற வகையில் மேற்கொள்ள முடியுமான சகல நடவடிக்கைகளையும் எடுக்க உள்ளதாக ஜனாதிபதி இங்கு கருத்து தெரிவித்தார்.

நாட்டில் உள்ள இரத்த புற்று நோயாளர்களுக்கு விசேட சிகிச்சைகளை வழங்கும் நிலையத்தை அமைத்தல், நாட்டில் உள்ள புற்று நோய் ஒழிப்பு நிறுவனங்களின் உயர் தொழில்நுட்ப இயந்திரங்களை பொருத்துதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இக்கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று எல்லா மாவட்டங்களிலும் புற்று நோய் நிலையம் ஒன்றை ஸ்தாபித்து அதற்கு ஒரு விசேட வைத்தியரையும் நியமிக்கும் செயற்திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. வடக்கில் புற்று நோய்க்கு ஆளாகும் மக்களுக்காக யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள புற்று நோய் நிலையத்தின் நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி கேட்டறிந்தார்.

புற்று நோயாளர்களின் சிகிச்சை நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பது தொடர்பாக விசேட வைத்திய சங்கத்தினால் இங்கு பல்வேறு முன்மொழிவுகள் ஜனாதிபதியிடம் முன் வைக்கப்பட்டன. தொற்றாத நோய்களுக்கிடையே முக்கியமான ஒரு நோயான புற்று நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தற்போது மஹரகம தேசிய புற்று நோய் நிலையம், கண்டி கரஹாபிட்டிய, பதுளை, அநுராதபுரம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, குருநாகல், இரத்தினபுரி ஆகிய வைத்தியசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள புற்று நோய் சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சைப் பெற்று வரும் நோயாளிகளின் எண்ணிக்கை 25,000த்தையும் தாண்டியுள்ளது.

மஹரகம புற்று நோய் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஜி.விஜயசூரிய, புற்று நோய் விசேட வைத்தியர்கள் சங்கத்தின் தலைவர் டாக்டர் மகேந்திர பெரேரா ஆகியோரும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

# தாய்த்தமிழ் நின்று நிலைக்க

# கொழும்பு தமிழ்ச்சங்கம் பாரிய பணி

## - முன்னாள் தலைவர் தெரிவிப்பு -

(கொழும்பு)

கல்வியில் அழகியல் அம்சங்கள் பல உள்ளன. அதனை தமிழ் மொழியைக் கற்பதனூடகத்தான் பெற முடியும். தமிழ் ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுப் பாரம்பரியத்தை உடையது. தமிழில் வெளிவந்துள்ள பண்டைய இலக்கியங்களாக இருந்தாலும் நவீன இலக்கியங்களாக இருப்பினும் அவற்றில் நாம் மகிழ்ந்து இன்புறத்தக்கவை பல உள்ளன. அவற்றை விளங்கிக் கொள்வதற்கும், தாய்த் தமிழ் காலத்தின் நின்று நிலைக்கவும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் பாரிய பங்களிப்பைச் செய்து வருகின்றது என கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், பேராசிரியருமான சோ.சந்திரசேகரன் குறிப்பிட்டார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தமிழ்ப் பட்டயக் கற்கைநெறி ஆரம்ப வைபவம் நேற்று முன்தினம் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் மு.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் க.பொ.த. (சா.த) வகுப்புடனும் க.பொ.த. (உ.த) வகுப்புடனும் தமிழ் முடிவடைகின்றது. பின்னர் பல்கலைக்கழகம் நுழைவோரில் சிலர் தமிழை ஒரு பாடமாகப் பயில்கின்றனர். அத்தோடு தமிழின் நிலை என்னவென்று சிந்தித்துப் பாருங்கள். இன்று தொழில் கல்விக்குக் கொடுக்கும் முன்னுரிமை, ஆங்கிலக் கல்வியின்பாலுள்ள மோகம் தமிழ்மீது குறிப்பாக பெற்றோருக்கு இல்லை. இலங்கையின் கல்விக் கொள்கை என்னவென்றால் தமிழ் பேசும் பிள்ளைகள் தமிழிலேயே கல்வி கற்க வேண்டும், ஏனைய மொழிகளில் கல்வி கற்கக் கூடாது என்பது.

ஆனால் நமது தமிழ்ப் பெற்றோர்கள் இக் கல்விக் கொள்கைக்கு மாறாகவே செயற்படுகின்றனர். தமிழ்மொழி மூலம் கல்வி கற்கும் பெற்றோருக்கும் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்கும் பெற்றோருக்கும் இடையில் தகராறு வேறு ஏற்படுகின்றது. இது அரச மேலிடம் வரை சென்றுள்ளது. இப்பிரச்சினைகளுக்குத் தீர்வாக அரசாங்கம் நேற்று இருமொழிக் கல்வி முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. தற்போது அரச பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வி மட்டும் என்ற முறைமை இல்லை. உலகத்திலேயே தமிழ்ப் பிள்ளைகள் தமிழில் மட்டும்தான் படிக்க வேண்டும் என்ற கொள்கை இலங்கையில் மட்டுந்தான் உள்ளது. நாங்கள் அறிவுப் பொருளாதாரக் காலத்தில் வாழ்கின்றோம். எனவே இக்காலத்தில் எமது கலாசாரம், பண்பாடு அழிந்துவிடாதபடி நாங்கள் பாதுகாக்க வேண்டும்.

முஸ்லிம்கள் தங்களது மதத்தை வைத்துக் கொண்டு வழிபிறழாது வாழ்வார்கள். ஆனால், தமிழ் மக்கள் ஆங்கில மோகத்தில் தங்கள் பண்பாடுகளை மறக்கின்றனர் என்பது கசப்பான உண்மை. தமிழர்கள் என்று தங்கள் மொழியைக் கைவிடுகின்றார்களோ அன்று நிலை கவலைக்கிடமானதாக மாறும். தமிழிலுள்ள இலக்கியத்தைப் படித்து இன்புறுவதற்காகவேனும் தமிழன் தமிழைக் கற்றுக் கொள்ள வேண்டும். தமிழ்மொழி அல்லாத வேறு எந்தவொரு துறையில் மன மகிழ்வடைய முடியாது என்றார்.

## நேபாளத்திற்குள் பிரவேசித்த 5 இலங்கையர் கைது

நேபாள நாட்டிற்குள் பிரவேசித்த ஐந்து இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டனர். நேபாளத்தின் சீமா சுர்காசாயா பல் என்ற எஸ்.எஸ்.பி. எல்லைப் பாதுகாப்பு படையினர் இவர்களை கைதுசெய்தனர்.

இவர்கள் இந்தியாவில் இருந்து எல்லை கடந்து நேபாளத்துக்குள் பிரவேசித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ககாட்விட்டா எல்லைக்கு ஊடாக நேபாளத்துக்குள் பங்களாதேஷ், தீபெத்தியர்கள், பூட்டான் நாட்டவர்கள் மற்றும் இலங்கையர்கள் அத்துமீறி பிரவேசிப்பதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தலுக்கப் பின்னர் நடவடிக்கை

(கொழும்பு)

தேர்தல் காலத்தில் பொருட்களை விநியோகித்தல், உணவு விநியோகித்தல், அச்சுறுத்தல் மற்றும் பணம் கொடுக்கும் வேட்பாளர்கள் தொடர்பில் தேர்தலுக்குப் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

குருநாகல் உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது. இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் முதலில் பொலிஸில் முறைப்பாடு செய்யவேண்டும் என்றும் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

# தமிழ்த் தேசிய அரசியற் தீர்வுகளைக் கேள்விக்குட்படுத்தல் - 2



**முஸ்லிம்களும், மலையகத் தமிழரும் தம்மைத் தனித் தேசங்களாக அறிவித்தாலென்ன அறிவிக்காவிட்டாலென்ன, அவர்களும் இந்தத் தீவின் பன்மைத்துவத்தின் கூறுகளாக இருக்கிறார்கள் என்பதே உண்மை. எனவே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் செயன்முறைகளிலே சிங்களவுரையோ, தமிழரையோ காட்டிலும் அவர்கள் அரசியல் அந்தஸ்துக் குறைந்தவர்கள் அல்லர் என்பதனை நாம் நினைவிலே கொள்ள வேண்டும்.**

## மகேந்திரன் திருவரங்கன் கட்டுரையிலிருந்து

(நேற்றைய தொடர்ச்சி)

இரு வேறான இறைமைகளினை அங்கீகரிக்கும் இரட்டைத் தேசிய அரசின் குறைபாடுகள் பற்றி ஹன்னா அரெண்ட் என்ற அறிஞர் முன்வைத்துள்ள கருத்துக்களினை இங்கே பகிர்ந்து கொள்வது பொருத்தமாக இருக்கும். பாலஸ்தீனத்திலே அரபு மற்றும் யூத மக்களுக்கிடையில் நிலவிய முரண்பாடுகளுக்குத் தீர்வுகாணும் வகையில் ஜூடா மக்னெஸ் மற்றும் மார்ட்டின் பூபர் ஆகியோரினால் முன்மொழியப்பட்ட இரட்டைத் தேசிய சமஷ்டியினை ஹன்னா அரெண்ட் 1943இல் எதிர்த்தார். அதனை எதிர்த்தமைக்கு அரெண்ட் சொன்ன காரணம் அந்த இரட்டைத் தேசிய ரீதியிலான சமஷ்டித் தீர்வு தேச-அரசு (ஒரு தேசம் ஒரு அரசு) (nation-state) என்ற பொறிமுறையினை இன்னொரு வகையில் மீளுருவாக்கும் என்பதே. சமஷ்டியின் கீழ் வருகின்ற இரண்டு தேசங்களும் தங்களின் தேசங்களுக்குள்ளே, தேச-அரசு போன்று வேற்றுமைப்படுத்தல்களினை ஏற்படுத்துவதனை நாம் தவிர்க்க வேண்டுமாயின், சமஷ்டியின் கீழ் உள்ள எந்த உறுப்புத் தேசமும் தனக்கென இறைமையினைக் கொண்டிருக்கக் கூடாது என்பது அரெண்டின் வாதமாக இருந்தது.

சமஷ்டி அடிப்படையில் இறைமை இரண்டு தேசங்களுக்கு இடையில் (பிராந்திய) ரீதியாகப் பகிரப்படுவதற்குப் பதிலாக, இரண்டு தேசங்களுக்கு எனத் தனித்தனியாக பிரிக்கப்படாத வகையில் இறைமை பரவலாக்கம் செய்யப்பட வேண்டும் என்று அரெண்ட் வாதிட்டார். தேசிய ரீதியிலான இறமையினை எதிர்ப்பதற்கு அரெண்ட் கூறும் காரணம் தேசிய நலன்கள் எனப்படுபவை குறித்த ஒரு சமூகத்தினை முதன்மைப்படுத்துபவை எனவும் அவை எல்லோருக்கும் பொதுவான நலன்கள் அல்ல என்பதாகும். எனவே சமஷ்டி அடிப்படையில் உருவாக்கப்படும் அரசக் கட்டமைப்பு, தேசிய இறைமைதான் அதிகூடியதும், ஒருமைப்படுத்தப்பட்டதுமான அதிகாரம் என்ற கருத்தினை இல்லாது செய்ய வேண்டும் என அரெண்ட் குறிப்பிடுகிறார். அத்துடன் இந்த வகையிலான சமஷ்டியில் ஒரு தேசத்தின் இருப்பும் அதன் செயற்பாடுகளும் அந்தத் தேசத்தினை உள்ளடக்கும் பன்மைத்துவத்துக்குள்ளே வைத்துப் பார்க்கப்படல் வேண்டும் எனவும், அந்தப் பன்மைத்துவத்துக்கு வெளியே தேசத்துக்கு என ஒரு தனியான அரசியற் பயணம் இருக்க முடியாது என்பதுவும் அரெண்டின் வாதங்களாகும்.

இவ்வாறான ஒரு சமஷ்டி முறையிலே தேசங்கள் தான் தோன்றித்தனமாகச் செயற்பட முடியாது; அவை ஒன்றில் மற்றொன்று தங்கியிருக்க வேண்டும். இது சமஷ்டி என்ற பொறிமுறையின் கீழ் தேசங்களுக்கு இடையில் வேறுபாடுகளைக் கூர்மைப்படுத்தாமல், சமூகங்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து வாழ்வதனையும், சேர்ந்து இயங்குவதனையும் ஊக்குவிக்க வாய்ப்பினை ஏற்படுத்தும். அரெண்ட் இரட்டைத் தேசியத்தினை முற்றுமுழுவதுமாக எதிர்க்கவில்லை. மக்னெஸ் மற்றும் பூபர் ஆகியோரின் இரட்டைத்தேசிய வாதத்தின் மீதான அரெண்டின் விமர்சனம் நாம் இன சமத்துவத்தினை அடையும் நோக்கிலும், இனங்களுக்கு இடையில் பிராந்திய மட்டங்களிலே கூடி வாழ்வதனை ஊக்குவிக்கும் வகையிலும் ஒரே நேரத்திலே செயற்பட வேண்டும் என்பதனை எடுத்துக்காட்டுகிறது.

இந்த வகையில், இலங்கையின் சிங்கள தமிழ் தேசங்களுக்கெனத் தமிழ்த் தேசியவாதத்தினால் வரையறுக்கப்படும் நிலப்பரப்புக்களினுள் வாழும் பிராந்திய சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய ஒரு சமஷ்டியினை உருவாக்க வேண்டுமாயின், இரட்டைத் தேசியவாத உரையாடலினை நாம் கேள்விக்குள்ளாக்க வேண்டும். அரெண்டின் விமர்சனத்தினைத் தழுவியதாக இலங்கையில் அவதானிக்கப்படும் தேசியவாத உரையாடல்களை நோக்கி நாம் ஒரு கேள்வியினை முன்வைக்க முடியும். இலங்கையின் பிரதானமான இனக் குழுக்களான சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்கள் தாம் வாழும் வெவ்வேறு பட்ட நிலப்பரப்புக்களினை ஏனைய சமூகத்தவருடன் பகிர்ந்துகொள்கிறார்கள். இந்த நிலையிலே அரசினை மீளுருவாக்கும் செயன்முறைகளிலே நாம் இந்தச் சமூகங்களினை முழுவதும் சுயாதீனத் தன்மை கொண்ட, இறைமை மிக்க சமூகங்களாக முன்னிறுத்தலாமா? பிராந்திய சுயாட்சி மற்றும் இறைமை என்பன பற்றிய எமது உரையாடல்கள் தேசியத் தாயகங்களுக்குள் வாழும் சிறுபான்மையினர் பற்றியும், தேசிய எல்லைகளைக் கடந்த தமது அசைவின் மூலமாக நாட்டில் வாழும் சமூகங்கள் தமக்கு இடையில் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகளினையும் கருத்திலே கொள்ளவேண்டும்.

அரச மீளுருவாக்கச் செயன்முறைகளிலே கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒரு முக்கியமான கேள்வியினை ஷாரிகா திராணகம முன்வைக்கிறார். இந்தக் கேள்வி நாம் வாழும் வீடுகளுக்கும் எமது தேசிய ரீதியிலான தாயகங்களுக்கும் இடையிலான இடைவெளிகள் பற்றியது: 'எங்களுக்கு வீடுகள் இருந்தாலும், அந்த வீடுகள் எங்களுக்கு உரியது என்று சொல்லப்படும் தாயகங்களுக்கு வெளியே இருந்தால் நாம் என்ன செய்வது?" காலனித்துவ காலத்திலும் அதற்குப் பின்னரும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் தமது தாயகங்களில் இருந்து வெளியேறி ஏனைய இனத்தவரின் தாயகப் பகுதிகளுக்கு வேலைக்குச் சென்றிருக்கிறார்கள். இவ்வாறு தொழில்வாய்ப்பினைத் தேடுவதன் நிமித்தம் உருவாகிய பொருளாதார ரீதியிலான சமூகங்கள் இலங்கையில் பேசப்படும் தேசியவாத ரீதியான நிலப்பரப்புக்களுடன் தொடர்புபட்ட உரையாடல்களுடன் முரண்படுகின்றன. அதே போன்று அரச அனுசரணையுடன் இடம்பெறும் குடியேற்றங்கள் நாட்டின் நிலப்பரப்பினது இன அடையாளங்களைக் காலனித்துவத்தின் முடிவின் பின் தொடர்ச்சியாக மாற்றி வருகின்றன. சிங்கள-பௌத்த நிகழ்ச்சி நிரலினை முன்னெடுக்கும் வகையில், சிங்கள பௌத்தர்களை தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் அரசாங்கங்கள் குடியேற்றுகின்றமையினை வன்மையாகக் கண்டித்து, நிலங்களில் இருந்து அரசினால் அகற்றப்பட்ட தமிழ் மக்கள் மீளவும் தமது நிலங்களிலே குடியேற்றப்பட வேண்டும் என நாம் கோரும் அதேவேளை, பல ஆண்டுகளுக்கு முன்னர் குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் (இவர்களிற் பலர் மிகவும் வறியவர்களாகவும் இருக்கின்றனர்) இன்று வடகிழக்கின் ஒரு பகுதியாக மாறிவிட்டார்கள் என்பதனையும், அவர்களுக்கும் இந்தப் பிராந்தியத்தின் வரலாற்றிலே ஓர் இடம் இருக்கிறது என்பதனையும் மறுக்க முடியாது.

அதே போன்று போர்க்காலத்திலே வடகிழக்கிலே இருந்து வெளியேறிய மக்களிற் பலர் தற்போது வெள்ளவத்தை உள்ளடங்கலாகக் கொழும்பின் பல பகுதிகளிலும் வாழ்கிறார்கள். அதே போல வடக்கிலிருந்து புலிகளினால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களிற் பலர் தற்போது புத்தளத்தினைத் தமது வாழ்விடமாகக் கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம்களும், மலையகத் தமிழரும் தம்மைத் தனித் தேசங்களாக அறிவித்தாலென்ன அறிவிக்காவிட்டாலென்ன, அவர்களும் இந்தத் தீவின் பன்மைத்துவத்தின் கூறுகளாக இருக்கிறார்கள் என்பதே உண்மை. எனவே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் செயன்முறைகளிலே சிங்களவரையோ, தமிழரையோ காட்டிலும் அவர்கள் அரசியல் அந்தஸ்துக் குறைந்தவர்கள் அல்லர் என்பதனை நாம் நினைவிலே கொள்ள வேண்டும்.

இனப் பெரும்பான்மைவாதத்தினை சிறுபான்மையின மக்கள் தமது நாளாந்த வாழ்க்கையிலே அனுபவிக்கும் ஒரு நாடான இலங்கையிலே அரசினை மீளுருவாக்கம் செய்யும் செயன்முறைகள் இனத்துவ அடையாளங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஆனால் அந்தச் செயன்முறைகள் நாட்டின் நில ரீதியிலான இனப் பரம்பலினைப் பற்றிய எளிமைப்படுத்தப்பட்ட விளக்கங்களின் அடிப்படையில் இருக்காமல், அவற்றின் சிக்கற் தன்மை குறித்து கரிசனை கொண்டவையாக இருக்க வேண்டும். உதாரணமாக நாட்டின் சர்ச்சைக்குரிய நிலப்பரப்புகளிலே ஒன்றாகக் கிழக்கு மாகாணம் தொடர்ந்தும் இருந்து கொண்டிருக்கிறது என்பதனை நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். அந்த மாகாணம் வட மாகாணத்துடன் இணைந்திருக்க வேண்டுமா இல்லையா எனத் தீர்மானிப்பதிலே கிழக்கு முஸ்லிம்களின் நிலைப்பாடு முக்கியமான பங்கினை வகிக்கப் போகிறது.

ஹோமி பாபா, ஸ்ருவற் மோதா போன்ற அறிஞர்களால் முன்வைக்கப்படும் விளிம்புத்தன்மை (liminality) என்ற எண்ணக்கரு இலங்கையின் நிலப்பரப்புக்களுக்கும், இனத்துவ அடையாளங்களுக்கும் இடையிலான தொடர்புகளை விளக்குவதற்குப் பொருத்தமானதாக இருக்கும். விளிம்புத்தன்மை என்பது ஒரு பொருளின் அடையாளம் உறுதியானதாகவோ, நிலைத்ததாகவோ இருக்காது, ஐயப்பாட்டினை ஏற்படுத்தும் வகையில், அசைந்து கொண்டும், மாறிக் கொண்டும், பாயி நிலையில் இருப்பதனைக் குறிக்கும் ஓர் எண்ணக்கரு. வடகிழக்கின் சில பகுதிகள் உள்ளடங்கலாக இலங்கையில் இருக்கும் பல நிலப்பரப்புக்களின் இன அடையாளம் விளிம்புத் தன்மை மிக்கதாக இருக்கிறது. பொருளாதாரத் தேவைகளின் நிமித்தமான இடப்பெயர்வுகள், பாரம்பரிய ரீதியிலான இனப் பல்வகைமை, அரச குடியேற்றத் திட்டங்கள் மற்றும் உலகமயமாக்கற் செயன்முறைகள் இந்த நிலப்பரப்புக்களின் இன ரீதியிலான அடையாளத்தினை உறுதியற்றதாக்கி, விளிம்புத் தன்மை மிக்கனவாக மாற்றுகின்றன.


இலங்கையும், இலங்கையின் வடகிழக்கும் பல்லின சமூகங்கள் அமைதியாகக் கூடி வாழக்கூடிய புரட்சிகரமான பன்மைத்துவத்தினை வெளிப்படுத்தும் நிலையங்களாக இருக்க வேண்டுமாயின் அரச மீளுருவாக்கத்தின் போது இலங்கையின் நிலப்பரப்புக்களிலே அவதானிக்கப்படும் விளிம்புத் தன்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படல் அவசியம். நிலத்தினது விளிம்புத் தன்மையானது அந்த நிலத்தினது இறைமையினை ஒரு குறித்த சமூகத்திடம் மாத்திரம் ஒப்படைப்பதனை அனுமதிக்க மாட்டாது. அதே வேளை அந்த நிலத்தில் வாழும் எந்த ஒரு சமூகத்தினையும் ஒதுக்கி வைத்துவிட்டு அந்த நிலத்தின் இறைமையினை நாம் தீர்மானிக்க முடியாது என்பதனையும் விளிம்புத் தன்மை வலியுறுத்துகிறது.

இலங்கையிலே நாங்கள் அவதானிக்கும் இனப் பல்வகைமையினைப் புரிந்துகொள்ளுவதற்கு தமிழ்த் தேசிய அரசியல் முன்வைக்கும் நில இருமைச் சட்டகம் (சிங்களம்- தமிழ்) பொருத்தமற்றது. இடம்பெயர்ந்த மக்கள், பிராந்திய சிறுபான்மையினர், குடியமர்த்தப்பட்ட மக்கள் போன்றவர்கள், இலங்கையிலே சமஷ்டியினைப் பற்றி நாம் சிந்திக்கையிலே, எமக்குச் சவாலாக அமையும் மக்கள் குழுக்களாக இருக்கின்றனர். ஆனால் எமது சிந்தனைப் போக்கினைத் தேசியவாதத்தின் நில அடையாளச் சட்டகங்களில் இருந்து விடுவித்து சமஷ்டியினைப் பற்றி நாம் சிந்திப்போமானால் இந்தச் சவாலினை நாம் வெல்லமுடியும். அவ்வாறு செயற்படும் போது நாம் ஒரு கூடிய நீதியினை வழங்கக் கூடிய அரசினையும், பல்லின மக்கள் நாட்டின் பிராந்தியங்களிலே கூடி வாழக்கூடிய ஓர் அரசினையும் ஒரே நேரத்திலே தோற்றுவிப்பதற்கான வழிகளைக் கண்டறிய முடியும். வடக்குக் கிழக்கில் வாழும் தமிழர்கள் சுயாட்சியினைக் கோர முடியும் ஆனால் அவர்கள் அங்குள்ள சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களினை விலத்திவிட்டு சுயநிர்ணயம் செய்ய முடியாது. ஏனெனில் வடகிழக்கில் உள்ள தமிழர்கள் விரும்புகிறார்களோ இல்லையோ, அவர்கள் தற்போது தாம் வாழும் நிலப்பரப்புக்களினைச் சிங்களவருடனும் முஸ்லிம்களுடனும் பகிர்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதனை அவர்கள் மறுக்க முடியாது.

இதனாலேயே, வடகிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தமது விடுதலைக்கான பயணத்திலே, அந்தப் பிராந்தியத்திலும், நாட்டின் ஏனைய பிராந்தியங்களிலும் வாழும் ஏனைய இன மக்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் மாத்திரமே, தமக்காகவும் ஏனையோருக்காகவும், நீதியும் ஐக்கியமும் மிக்க பன்மைத்துவத்தினை மதிக்கும் ஓர் எதிர்காலத்தினை உருவாக்க முடியும். ●

# தேர்தலை சீர்குலைக்க முயற்சித்தால் துப்பாக்கியால் சுடும் அதிகாரம்

## - பொலிஸாருக்கு வழங்கினார் தேர்தல்கள் ஆணையாளர் -



அமைதியானதும் நீதியானதுமான முறையில் தேர்தல் நடாத்தப்படுவதனை சீர்குலைக்க முயற்சிக்கும் நபர்களை துப்பாக்கியால் சுடும் அளவிற்கு, பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அமைதியாக தேர்தல் நடாத்தப்படுவதனை தடுக்க முயற்சிக்கும் எந்தவொருவரையும் உச்சபட்ச அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எவ்விதமான அச்சமும் சந்தேகமும் இன்றி தைரியமாக வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்கத் தேவையான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

மக்கள் அமைதியான முறையில் வாக்களிப்பதற்குத் தேவையான சகல ஏற்பாடுகளும் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன.

வாக்குச் சாவடிகளில் நாச வேலைகளில் ஈடுபட எவருக்கும் அனுமதியளிக்கப்படமாட்டாது.

சட்டவிரோதமான செயற்பாடுகள் இடம்பெற்றால் குறித்த வாக்குச் சாவடியின் வாக்களிப்பினை சூன்யமாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தேர்தல் சட்டங்களை மீறும் வேட்பாளர்களுக்கு மதிய உணவு காவல் நிலையத்திலும் இரவு உணவு விளக்கமறியலிலும் வழங்கப்படும் என்றார்.

# முற்றிலும் வேறுபட்ட சூழலில் இம்முறை நாடாளுமன்றத் தேர்தல்

## - பவ்ரல் கண்காணிப்பு அமைப்பு தெரிவிப்பு -


இலங்கையில் கடந்த காலங்களில் நடந்த தேர்தல்களுடன் ஒப்பிடும் போது, இம்முறை தேர்தல் முற்றிலும் வேறுபட்ட சூழலில் நடப்பதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் கூறுகின்றனர்.

ஆயிரத்து நூறுக்கும் அதிகமான தேர்தல்கால சம்பவங்கள் பதிவாகியுள்ள போதிலும், கடந்த காலத்துடன் ஒப்பிடும் போது வன்முறைகள் மிகவும் குறைந்திருக்கின்றன என்று பவ்ரல் எனும் சுயாதீனமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான சுயாதீன கண்காணிப்பு அமைப்பின் தலைமை இயக்குநர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

கடந்த கால தேர்தல்களின் போது, அரச சொத்துக்களும் வளங்களும் அரசியல் தேவைகளுக்காக முறைகேடாக பயன்படுத்தப்பட்டமை நாடளாவிய ரீதியில் பெரும் பிரச்சினையாக இருந்ததாக கண்காணிப்பாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

எனினும், இம்முறை 130 என்ற அளவிலேயே அது தொடர்பான முறைப்பாடுகள் உள்ளதாகவும் அவை மக்களை மோசமாக பாதிக்கும் அளவில் இல்லை.

கடந்த காலங்களில் மக்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்காக பெருமளவு அரச வளங்கள் விரயம் செய்யப்பட்டதாகவும். அப்படியான 150 அளவான முறைப்பாடுகளே இம்முறை பதிவாகியுள்ளன.



ஒப்பீட்டு அளவில் இம்முறை தேர்தல்கால நடவடிக்கைகள் சுதந்திரமாகவும் நியாயமாகவும் இருந்துள்ளன. இந்த விடயத்தில் தேர்தல்கள் ஆணையாளரின் நிலைப்பாடு மிகவும் வரவேற்கத்தக்கது.

தேர்தல் கால முறைகேடுகள் மற்றும் வன்முறைகள் தொடர்பில் 500 இற்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் 12இற்கும் அதிகமான வேட்பாளர்களும் இம்முறை கைதாகியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இம்முறை தேர்தலில் ஐரோப்பிய ஒன்றியம், கொமன் வெல்த் அமைப்பு உள்ளிட்ட அமைப்புகளின் 120இற்கும் மேற்பட்ட வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

உள்ளூர் கண்காணிப்பாளர்கள் 20 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களும் நாடளாவிய ரீதியில் கண்காணிப்பில் ஈடுபடுவர்கள்

வாக்குகள் எண்ணப்படுவதையும் நாங்கள் இந்த முறை மேற்பார்வை செய்வோம்

2010 தேர்தலின் போது, வடக்குக் கிழக்கில் இராணுவத்தின் தலையீடுகள், அச்சுறுத்தல்கள் இருப்பதாக முறைப்பாடுகள் இருந்தன.

ஆனால், இம்முறை இராணுவத் தரப்பில் ஒருவர் கூட தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடவில்லை. சிவில் பாதுகாப்பு படையணி மீது கடந்த தடவை முறைப்பாடுகள் இருந்தன,

இம்முறை அப்படி எதுவும் இல்லை. இராணுவத்தினர் இம்முறை தேர்தல் விடயங்களில் அக்கறை காட்டவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் சட்ட மீறலில் ஈடுபட்ட 800 பேர் இதுவரை கைது

தேர்தல் சட்டங்களை மீறிய 800 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைதானவர்களில் 12 வேட்பாளர்களும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிடுகின்றது.

தேர்தல் சட்ட மீறல்களில் ஈடுபட்டவர்களை கைது செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் மூலம் இந்த கைதுகள் இடம்பெற்றுள்ளன.

சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை கைதுசெய்வதற்கான 275 சுற்றிவளைப்புகள் இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்.

இந்த சுற்றிவளைப்புகள் மூலம் 634 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதுதவிர தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 357 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன், இவற்றின் மூலம் 163 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான சந்தேகநபர்கள் அனைவருக்கும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

தேர்தல் காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள சுற்றிவளைப்புகளின் மூலம் 207 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவற்றை பொலிஸார் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளனர்.

நீதிமன்ற நடவடிக்கையின் பின்னரே இந்த வாகனங்கள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# அரசியல் வாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு விசாரணைகள் தொடரும்

எந்தவொரு கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சில முக்கிய அரசியல் வாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் ரணில் தரப்பு வெற்றியீட்டினாலும், மகிந்த தரப்பு வெற்றியீட்டினாலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இவ்வாறு நடவடிக்கை எடுப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை ஏற்கனவே இரண்டு கட்சிகளும் எடுத்துள்ளன.

முக்கிய அரசியல்வாதிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் இவ்வாறு தண்டிக்கப்பட உள்ளனர்.

தகவல்களை திரட்டுதல் மற்றும் சட்ட ஆலோசனை களைப் பெற்றுக்கொள்ளல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அதிமுக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா ஆகியோரை பணி நீக்கியதனைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையை கருத்திற் கொண்டு இந்த விசேட பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஏற்படக் கூடிய நிலைமைகளை கருத்திற் கொண்டு இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதன் பின்னர் நாட்டில் கலவரங்கள் வெடிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக புலனாய்வுத் தகவல்களை ஆதாரம் காட்டி உயர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் அதி முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதி முக்கிய பிரமுகர்கள் வசித்து வரும் பகுதிகளுக்கும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வாக்களிப்பதற்காக இன்று விடுமுறை

(கொழும்பு)

இன்றைய பொதுத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள அனைத்து அரச மற்றும் தனியார் ஊழியர்களுக்கும் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என, தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தல் மூலம் குறித்த விடுமுறை வழங்கப் படும் நடைமுறைகள் பற்றி வெளியிடப்பட்டுள்ளதாக, மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்துள்ளார்.

இதன்படி தூரத்தை அடிப்படையாகக் கொண்டு, அதிகபட்சமாக இரண்டு நாட்கள் வரையான விடுமுறை வாக்காளர்களுக்கு கிட்டும் என, அவர் கூறியுள்ளார்.

# வெளிவரவிருக்கின்றது வேட்பாளர்களின் பிரசார செலவுகள்

நாடாளுமன்றத் தேர்தலுக்காக வேட்பாளர்கள் செய்த செலவுகள் குறித்த தகவல்கள் உள்ளடங்கிய அறிக்கை ஒன்று வெளியிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்திற்காக பிரதான அரசியல் கட்சிகள் மற்றும் சில வேட்பாளர்கள் எவ்வளவு பணத்தை செலவிட்டுள்ளார்கள் என்பது குறித்து தேர்தலின் பின்னர் வெளியிடப்பட உள்ளது.

தேர்தல்கள் கண்காணிப்பாளர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்ட ஆய்வுக் குழுவொன்று இவ்வாறு அறிக்கை வெளியிடத் திட்டமிட்டுள்ளது.

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் தற்போது செய்யப்பட்டு வரும் பிரசாரங்கள் கண்காணிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரசாரத்திற்கு செலவாகும் தொகை நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு அதிகம் என கண்காணிப்புக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

சில வேட்பாளர்கள் பிரச்சாரத்திற்காக 200 முதல் 400 இற்கும் மேற்பட்ட இலட்ச ரூபா பணத்தை செலவிட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளன.

# தோண்டியெடுக்கும் நோக்கிலேயே ரக்பிவீரரின் சடலத்தை புதைத்தோம்

## - குடும்பத்தினர் தகவல் -

(கொழும்பு)

படுகொலையுண்ட பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் சடலத்தை மீண்டும் தோண்டியெடுக்கும் நோக்கிலேயே நல்லடக்கம் செய்ததாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

வசீம் தாஜுதீனின் சடலம் இஸ்லாமிய வழக்கத்துக்கு மாறாக பொலித்தீனால் சுற்றப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டிருந்தது.

இதன் காரணமாக தற்போதைக்கு அவரது சடலம் மீள் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் செயற்பாடு இலகுவாக்கப்பட்டுள்ளது.

தாஜுதீனின் சடலத்தை அவ்வாறு பொலித்தீனில் சுற்றி நல்லடக்கம் செய்யும் நடவடிக்கை அவரது தாய்மாமன் பயாஸ்லத்தீபின் முயற்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தனது சகோதரி மகன் மரணத்தில் மர்மம் இருப்பதாக பலமான சந்தேகம் கொண்டிருந்த அவர், வழக்கத்துக்கு மாறான முறையில் வெள்ளை பொலித்தீன் உறையில் சுற்றிய பின்னரே இஸ்லாமியர்களின் வழக்கத்தின்படி சடலத்தை வெள்ளைத் துணியினால் சுற்றியுள்ளார்.

என்றைக்காவது ஒரு நாள் தனது மருமகனின் மரணம் தொடர்பான மர்மங்கள் விலகி, தமது குடும்பத்தினருக்கு நியாயம் கிட்டும் என்று தாம் உறுதியாக நம்பியதாக தெரிவித்துள்ள அவர், தற்போது அதற்கான காலம் கனிந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சியில் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி



இன்று இடம் பெறுகின்ற தேர்தலிற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தேர்வத்தாட்சி அலுவலரும், அரசாங்க அதிபருமான சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்

யாழ் தேர்தல் மாவட்டத்தின் கிளிநொச்சி தொகுதியில் 96 வாக்களிப்பு நிலையங்களும், 7 வாக்கெண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதாகவும், வாக்களிப்பு நிலையங்களிற்கான வாக்குப் பெட்டிகள் பாதுகாப்பான முறையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் போதுமான அளவு முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், பாதுகாப்பு கடமைகளில் 500 இற்கு மேற்பட்ட பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், தேர்தல் கடமைகளிற்காக 2000 பேர் வரை உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# ஆண் சடலமாக மீட்பு

மின்சாரம் தாக்கி உயிரிழந்த நிலையில் சிறைச்சாலை உத்தியோகத்தர் மீட்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனர்.

யாழ்.திருநெல்வேலி தெற்கு பகுதியைச் சேர்ந்த கலைச்செல்வன் (வயது 32) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 3 தினங்களுக்கு முன்பு தனது வீட்டில் மின்சார வேலை செய்துகொண்டிருந்துள்ளார். அந்த வேலையின் போது மின்சாரம் தாக்கி உயிரிழந்து கிடந்துள்ளார்.

வீட்டில் தாய் மற்றும் தந்தை வாய் பேச முடியாதவர்கள் மகன் இறந்து கிடந்ததை கூட அறிந்திருக்காமல் இருந்த போது நேற்று ஞாயிற்றுக்கிழமை சடலத்தில் இருந்து துர்நாற்றம் வீசியுள்ளது.

அதன்போது, பெற்றோர்கள் மகன் இறந்து கிடந்ததை கண்டுள்ளனர். சம்பவ இடத்திற்கு கோப்பாய் பொலிஸார் சென்று பார்வையிட்டதுடன், சடலத்தினை யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளனர். (25)

# லொறி மோதியதில் பல்கலை மாணவன் காயம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மந்திகைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் பல்கலைக் கழக மாணவர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்ற மாணவனை லொறி ஒன்று மோதியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ் விபத்து நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் பாண்டியன் குளம் மல்லாவியைச் சேர்ந்த கந்தசாமி கோகுலதாஸ் (வயது 22) என்ற இளைஞனே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ)


# சட்ட விரோத மணல் அகழ்வு இருவர் கைது

(பளை)

பளை பகுதியில் அரச காணியில் சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்ந்த இருவரை, கடந்த வியாழக்கிழமை மதியம் கைது செய்துள்ளதாக பளை பொலிஸார் தெரிவித்தனர். கைதான இருவரும், கொடிகாமம் பகுதியினை சேர்ந்த 34, 25 வயதுடைய நபர்கள் எனவும் மணல் அகழ்வுக்கு இவர்கள் பயன்படுத்திய டிப்பர் வாகனத்தையும் கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட இவர்களை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பளை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# நல்லூர் முருகா....! நலம் தர வருவாய்....

நல்லைக் கந்தனின் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளதையிட்டு இக் கவிதை பிரசுரமாகிறது.



தெரியாதிருந்தேன் தேன் பொந்து
நல்லூரில் ஒன்று இருப்பது
அறியாதிருந்தேன் அறிவிலி - நான்
ஆலகால விசம் கண்ட மடக்கிய
ஐயன் மகன் ஆனைமுகன் தம்பி
மெய்யாகவே ஞானம் தருவான்
மேதினியில் சொல்லும் தரமில்லாத
சோதிவடிவே தாழ் கான கொடியேறிவா

மண்டைதீவு
மகிழ்நன்

# நாயைத் துரத்திய நபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

தனது வீட்டு நாயை கடித்த தெரு நாயை துரத்திச் சென்ற நபர் மாரடைப்பால் உயிரிழந்த சம்பவம் நேற்றுமுன்தினம் காலை உடுவில் தெற்கு சுன்னாகம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

லக்ஸ் மன் ஜோசப் (வயது 61) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வழமை போல தனது வீட்டு வேலைகளை செய்து கொண்டிருந்த நபர், தனது செல்லப் பிராணியை வெளியில் இருந்து வீட்டு வளவுக்குள் வந்த தெரு நாய் ஒன்று கடித்ததைக் கண்டு அந் நாயை துரத்தி சென்றுள்ளார்.

துரத்திச் சென்றவர் இடையில் களைப்படைந்து மயங்கியுள்ளார்.

அவரை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது, ஏற்கெனவே அவர் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மரண விசாரணைகளை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். சடலம் உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## முரசின் இன்றைய பலன்

17.08.2015 திங்கட்கிழமை

மன்மத வருஷம் ஆடி மாதம் 32 ஆம் திகதி.
சித்த யோகம் /திருதியை திதி
பூர நட்சத்திரம் காலை - 7.20 வரை பின் உத்தரம்
இராகுகாலம் 7.35 - 9.05 வரை சுப நேரம் 12.05 - 1.35 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — சுபகாரியம் நடாத்த கடன்படுதலும் அடகு வைத்தலும் தவிர்க்க முடியாதடி ஏற்படல்

**ரிஷபம்** — மனையாளின் நோய் நிலையானது அச்சத்தையும் பதகளிபபையும் ஏற்படுத்தல்

**மிதுனம்** — செல்லப்பிராணியின் இழப்பினால் தாங்க முடியாத துயரில் ஆழ்தல்

**கடகம்** — மனம் விட்டு கதைப்பதினால் மனநிம்மதி தக்க வைத்தல்

**சிம்மம்** — பயண முயற்சி தடங்கலை ஏற்படுத்தினாலும் முடிவில் சுமுக நிலைக்கு வந்து விடல்

**கன்னி** — தொடர் நஷ்டம் காரணமாக தொழிலைக் கைவிட்டு பங்கில் சேர விரும்புதல்

**துலாம்** — கண்டதே காட்சி கொண்டதே கோலம் எனத் திரிந்து மதிப்புக் கெடல்

**விருச்சிகம்** — பழையதை விற்று புதியதைப் கொள்வனவு செய்ய விழைதல்

**தனுசு** — கௌரவப்பதவி ஏற்பட பிரமுகர் கருணை காட்டுதல்

**மகரம்** — நிலுவையின் ஒரு பகுதி சேர்ந்தமை யினால் நிம்மதி பிறத்தல்

**கும்பம்** — புதிய மனை அமைக்க ஏற்ற இடத்தை ஜோதிடர் மூலம் தெரிவு செய்தல்

**மீனம்** — கடனை மீளப்பெற முடியாத நிலையில் முறைப்பட்டுக்கு வெளிக்கிடல்



# அமெரிக்க ஓப்பன் வெல்வதே இலக்கு

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் சாதிக்க விரும்புகின்றேன். அதற்கான கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன் என சேர்பியாவின் ரென்னிஸ் நட்சத்திரம் அனா இவானோவிச் தெரிவித்துள்ளார்.

சேர்பியாவின் ரென்னிஸ் நட்சத்திரம் அனா இவானோவிச், (வயது-27). களத்தில் ஆட்டத்தால் மட்டுமின்றி, அழகாலும் இரசிகர்களைக் கவர்ந்து இழுப்பவர். ஒரே ஒரு கிராண்ட்ஸ்லாம் பட்டம் (பிரெஞ்ச், 2008) வென்றுள்ளார். முன்னாள் முதல் நிலை வீராங்கனையான இவர், தற்போது 6ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

இவானோவிச் கூறியது: முன்பு எப்போதுமே ரென்னிஸ் பற்றி மட்டும்தான் சிந்திப்பேன். தற்போதுதான் இதிலிருந்து சற்று மாறியுள்ளேன். திரைப்படம் பார்க்கச்செல்கிறேன். என் நண்பர்களுடன் விடுதிக்குச் சென்று சாப்பிடுகிறேன். ஒரு சராசரி மனிதராக நானும் இருக்க விரும்புகிறேன். இதற்காகத்தான், இப்படி என்னை மாற்றிக் கொண்டேன். இதன்மூலம் மனதை நிம்மதியாக வைத்துக் கொள்ள முடிகிறது.

முன்பு, தரவரிசையிலும் பின்தங்கியிருந்தேன். இதில் முன்னேற்றம் அடைய எனக்கு நானே நெருக்கடி கொடுத்தேன். சில நேரத்தில் இது கைகொடுக்கும். பல நேரங்களில் என் முயற்சி போதிய அளவில் இல்லாமல் இருக்கும்.

ஆனால், எப்படியாவது மீண்டும் முன்னேற்றம் அடைவேன் என நம்பினேன். முதலிடம் மற்றும் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்வதை கனவாக வைத்திருந்தேன். இந்த இரண்டையும் வசப்படுத்திவிட்டேன். இந்த நிலையில் மகிழ்ச்சியாகவே உள்ளேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கவாஸ்கர் சீற்றம்

இலங்கை அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இறுதி வரை ஆதிக்கம் செலுத்திய இந்திய அணியால் ஹேரத்திடம் மண்டியிட்டு தோல்வியைத் தழுவியமை வேதனையான விடயம். இதுபோன்றதொரு நிலை மீண்டும் வராமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

ஆக்ரோஷமாக களத்தில் செயற்படுவதை விட்டுவிட்டு எதிரணியின் பலவீனத்தை புரிந்து கொண்டு எப்படி வெல்ல வேண்டும் என்பது குறித்து சிந்திக்க வேண்டும். ஒட்டுமொத்த துடுப்பாட்ட வீரர்களும் இரண்டாவது இனிங்ஸில் சொதப்பிவிட்டார். புஜாராயை டெஸ்ட் அணியில் காட்டாயம் சேர்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிண்ணம் வென்றது பார்சி

சூப்பர் கோப்பை கால்பந்து போட்டியில், மெஸ்சி இரண்டு கோல் அடித்து கைகொடுக்க பார்சிலோனா அணி, செவில்லா அணியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

ஜோர்ஜியாவில், 40ஆவது சூப்பர் கோப்பை கால்பந்து போட்டி நடைபெற்றது. இதில் ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் தொடரின் நடப்பு சம்பியன் பார்சிலோனா அணி, ஐரோப்பா லீக் தொடரின் நடப்பு சம்பியன் செவில்லா அணியைச் சந்தித்தது.

ஆட்டத்தின் 3ஆவது நிமிடத்தில் செவில்லா அணியின் பனேகா முதல் கோல் அடித்தார். இதற்கு ஆட்டத்தின் 7, 16ஆவது நிமிடங்களில் பார்சிலோனா அணியின் மெஸ்சி 2 கோல் அடித்து பதிலடி தந்தார். தொடர்ந்து அசத்திய பார்சிலோனா அணிக்கு ரபின்ஹா 44ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். முதல் பாதி முடிவில் பார்சிலோனா அணி 3-1 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியின் 52ஆவது நிமிடத்தில் பார்சிலோனா வீரர் சாரஸ் ஒரு கோல் அடித்தார். இதற்கு, செவில்லா அணியின் ரியஸ் (57ஆவது நிமிடம்), காமெய்ரோ (72ஆவது), கோனோபிளயங்கா (81ஆவது) தலா ஒரு கோல் அடித்து பதிலடி தந்தனர்.

ஆட்டநேர முடிவில் போட்டி 4-4 என சமநிலை வகித்தது. இதனையடுத்து இரு அணிகளுக்கும் கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இதில் எழுச்சி கண்ட பார்சிலோனா அணிக்கு 115ஆவது நிமிடத்தில் பெட்ரோ ஒரு கோல் அடித்தார். செவில்லா வீரர்களால் கூடுதலாக கோல் எதுவும் அடிக்க முடியவில்லை.

கூடுதல் நேர முடிவில் பார்சிலோனா அணி 5-4 என வெற்றி பெற்று, 5ஆவது முறையாக (1992,1997,2009, 2011, 2015) சூப்பர் கோப்பை வென்றது. இதன்மூலம் இத்தொடரில் அதிக முறை கோப்பை வென்ற அணிகளுக்கான பட்டியலில் முதலிடத்தை மிலன் (1989, 90, 94, 2003, 2007) அணியுடன் பகிர்ந்து கொண்டது. தவிர, கடந்த 2006இல் நடந்த இத்தொடரில் செவில்லா அணியிடம் கண்ட தோல்விக்கு பதிலடி கொடுத்தது.

# தொடை தட்ட காத்திருக்கிறது பங்களாதேஷ்

பாகிஸ்தான், இந்தியா, தென்னாபிரிக்கா போன்ற பெருந்தலைகளை எல்லாம் புரட்டிப் போட்ட பங்களாதேஷ் கிரிக்கெட் இளம் படை, அடுத்து அவுஸ்ரேலியாவுக்கு தொடைதட்டக் காத்திருக்கிறது.

ஆஷஸ் தொடரில் இங்கிலாந்திடம் பலத்த அடிவாங்கிக் கொண்டிருக்கும் அவுஸ்ரேலியா, அடுத்து பங்களாதேஷிற்கான சுற்றுப்பயணம் செய்து இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

இந்த ஆண்டு உலகக் கோப்பை போட்டியில் பங்களாதேஷ் முதல்முறையாக காலிறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றது. அது ஒன்றும் அதிர்ஷ்டவசமாக நடைபெற்ற விடயமில்லை என்று நிரூபிக்கும் விதமாக, தங்கள் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான், இந்தியா, தென்னாபிரிக்க அணிகளை ஒருநாள் தொடரில் மடக்கியது. அதன் மூலம், கிரிக்கெட் உலகத்தின் பார்வையையும் தன் பக்கம் திருப்பியது.

இதன் காரணமாகவே அவுஸ்ரேலிய அணி பங்களாதேஷ் சென்று விளையாட ஒப்புக்கொண்டுள்ளது. அதை பங்களாதேஷ் கிரிக்கெட் சபையும் உறுதிப்படுத்தியுள்ளது.

இதன்படி, எதிர்வரும் *செப்ரெம்பர் 28ஆம் திகதி பங்களாதேஷ் சென்றடையும் அவுஸ்ரேலிய அணி, அந்நாட்டு கிரிக்கெட் சபை லெவன் அணியுடன் மூன்று நாள் கொண்ட பயிற்சி ஆட்டத்தில் விளையாடுகிறது.

அதைத் தொடர்ந்து, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி ஒக்ரோபர் 9ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரையும், 2ஆவது டெஸ்ட் போட்டி 17ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரையிலும் நடைபெறவுள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய அணி பங்களாதேஷ் சென்று இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடியது, வென்றது. அதையடுத்து நீண்ட இடைவெளிக்குப் பின் தற்போதுதான் அந்நாட்டில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷ் சர்வசாதாரணமாக சுழற்றி எறிந்து டெஸ்ட்டில் தனது ஆதிக்கத்தை அவுஸ்ரேலியா நிலைநாட்டுமா அல்லது வங்கப் புலிகள் அவுஸ்ரேலிய கங்காருவை கலங்கடிப்பார்களா என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# காலி டெஸ்ட் வெற்றி பேச வார்த்தையில்லை


(காலி)

இந்திய அணிக்கெதிரான காலி டெஸ்ட் போட்டியின் வெற்றி குறித்து பேச வார்த்தையின்றி தவிக்கின்றேன். இந்த வெற்றியை என்னால் இன்னும் நம்ப முடியவில்லை என இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இந்திய அணிக்கெதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் போட்டியில் வெற்றி குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே மத்தியூஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,


என்ன ஒரு அற்புதமான திருப்பம்! எங்கள் வீரர்கள் அபாரமாக செயற்பட்டனர். பேச வார்த்தை வராமல் தவிக்கிறேன்... முதல் இனிங்ஸில் மிக மோசமாக துடுப்பாடினோம். ஆனால், உறுதியுடன் விளையாடி அந்த நெருக்கடியில் இருந்து மீண்டோம். சண்டிமல் தனி வீரராகப் போராடி கணிசமான இலக்கை நிர்ணயிக்க உதவினார்.

ஆடுகளம் மிக மிக சவாலானதாக அமைந்திருந்தது. முதல் மூன்றரை நாள் நாங்கள் பின்தங்கியிருந்தோம். நல்லவேளையாக எங்கள் அணியிலும் உலகத் தரம் வாய்ந்த சுழற்பந்துவீச்சாளர்கள் இருந்ததால், நம்பிக்கையுடன் போராடி



வெற்றியை வசப்படுத்திவிட்டோம். குறிப்பாக, ஹேரத் அமர்க்களப்படுத்திவிட்டார். இந்த வெற்றி மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த உற்சாகம் தொடரைக் கைப்பற்றிக் கொள்ள ஊக்கம் அளிக்கும் என நம்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# காலி டெஸ்டில் கற்றோம் பாடம்



(காலி)

காலி டெஸ்டில் பொறுப்புடன் ஆட தவறிவிட்டோம். இத்தோல்வியின் மூலம் நான் உட்பட துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் நெருக்கடியான நேரத்தில் எப்படி ஆடவேண்டும் என்பதை கற்றுக்கொள்ள வேண்டும் என இந்திய அணிக் கப்டன் ஹோலி தெரிவித்துள்ளார்.

காலி டெஸ்டில் ஒரு கட்டத்தில் இந்திய அணி இனிங்ஸ் வெற்றி பெறும் நிலையில் காணப்பட்டது. ஆனால் சண்டிமாலின் அதிரடி சதம் மற்றும் ஹேரத்தின் மிரட்டலான பந்து வீச்சால் சூழல் இலங்கைக்கு சாதகமாக மாறி, இந்தியாவின் வெற்றி வாய்ப்பும் பறிபோய் விட்டது. மோசமான தோல்விக்குப் பின்னர் இந்திய கப்டன் ஹோலி கூறியதாவது:-

தோல்விக்கு குறிப்பிட்டு யாரையும் குற்றம் சாட்ட முடியாது. ஒட்டுமொத்த அணியும் தான் காரணம். இலங்கையின் 2ஆவது இனிங்ஸில் 5 விக்கெட்டுக்களை விரைவாக (95-5) வீழ்த்தினோம். அந்த வாய்ப்பை கெட்டியாக பிடித்துக் கொள்ளத் தவறி விட்டோம். 3ஆவது நாளிலேயே நாங்கள் ஆட்டத்தை எங்களுக்கு சாதகமாக முடித்திருக்க வேண்டும். ஒரு பகுதி மோசமாக ஆடியதால், ஆட்டத்தின் போக்கே மாறி போய்விட்டது. மத்தியூஸ் மற்றும் அவரது அணிக்கே எல்லா பெருமையும் சாரும். ஹேரத் அருமையான பந்து வீச்சாளர். அவர் எங்களது துடுப்பாட்ட வீரர்களுக்கு தொடர்ந்து நெருக்கடி கொடுத்தார். இலக்கை நோக்கி நகர்ந்த போது, தெளிவான சிந்தனையும், மனரீதியாக வலுவாக இருப்பதும் முக்கியம். அது இன்று எங்களிடம் இல்லை. டெஸ்ட் முழுவதும் ஆதிக்கம் செலுத்திய போதிலும் இறுதியில் தோல்வி அணியாக இருப்பது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது.

நடுவர்களின் சில தவறான தீர்ப்புகள் (சண்டிமாலுக்கு 5 ஓட்டங்களில் பிடி கொடுக்க மறுப்பு) அளித்தது குறித்தும், அதை எதிர்த்து முறையீடு செய்யும் முறை (டி.ஆர்.எஸ்.) இருந்திருந்தால் தவறுகளை சரி செய்திருக்கலாமே என்றும் சொல்கிறீர்கள். இந்த தொடரில் டி.ஆர்.எஸ். முறை அமுல்படுத்தப்படவில்லை. தற்போது அது பற்றி விவாதிக்க விரும்பவில்லை. தொடர் நிறைவடைந்ததும், டி.ஆர்.எஸ். எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது? அதை எந்த அளவுக்கு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பது குறித்து ஆலோசிக்க வேண்டும்.

இப்போதைக்கு நாங்கள் விளையாடிய விதத்தை தான் குறை சொல்லியாக வேண்டும். மற்றபடி டி.ஆர்.எஸ். முறை வேண்டும் என்ற விவாதத்திற்குள்ளோ அல்லது இந்த டெஸ்டில் நடந்த மற்ற விவகாரங்களுக்குள்ளோ செல்ல விரும்பவில்லை.

நாம் 12 வீரர்களுடன் ஆட முடியாது. எனவே 20 விக்கெட்டுக்களை கைப்பற்றுவதற்காக 5 பந்து வீச்சாளர்களுடன் களம் இறங்க முடிவு செய்யும் போது, அதன் பின் துடுப்பாட்ட வீரர்கள் பொறுப்புடன் விளையாட வேண்டும். ஆனால் எங்களது துடுப்பாட்ட வீரர்கள் அதைச்செய்யவில்லை. அதற்காககூடுதலாக ஒரு துடுப்பாட்ட வீரர் இல்லாதது பாதிப்பை ஏற்படுத்தியது என்று சொல்ல மாட்டேன். 6 துடுப்பாட்ட வீரர்களுடன் நாங்கள் நன்றாக ஆடியிருக்க வேண்டும். 20 விக்கெட்டுக்களை வீழ்த்த வேண்டும் என்ற திட்டத்தை பந்து வீச்சாளர்கள் சரியாகச்செய்து முடித்து விட்டனர். 176 ஓட்டங்கள் எடுக்கக்கூடிய இலக்காகும். ஆனால் சூழ்நிலைக்குத் தக்கபடி எமது துடுப்பாட்ட வீரர்களின் ஆட்டம் சாதுர்யமாக இல்லை. தோல்வியில் இருந்து துடுப்பாட்ட வீரர்கள் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பாக சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ளும் விடயத்தில் நாம் இன்னும் முன்னேற்றம் காண வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.







யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரிக்கு அண்மையில் விஜயம் செய்த இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரரும் பிரபல வர்ணனையாளருமான ரசல் ஆனோல்ட் கிரிக்கெட் வீரர்களுக்கான பயிற்சி அளித்ததுடன் கிரிக்கெட் தொடர்பான நுணுக்கங்களையும் வழங்கியிருந்தார். இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் ஞானப்பொன்ராஜா மற்றும் பயிற்றுநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (எஸ்.பி.)

# மதுஷன் அதிரடிச் சதம்

## 3ஆவது சுற்றில் அசத்துகிறது யாழ். மத்தி


(யாழ்ப்பாணம்)

மதுஷனின் அதிரடிச் சதத்தின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி 173 ஓட்டங்களால் பெரு வெற்றிபெற்றதுடன் மூன்றாவது சுற்றில் அசத்தலான வெற்றிகளைப் பதிவு செய்து வருகின்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான மூன்றாவது சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் யாழ். மத்திய கல்லூரி மற்றும் குருநாகல் வன்னெநாயக்க தேசிய பாடசாலை அணிகளுக்கிடையிலான ஒரு நாள் ஆட்டம் ஒன்று கடந்த 12ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி மதுஷனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. தொடர்ந்தும் அதிரடியில் கலக்கிய மதுஷன் சதமடித்து அசத்தினார். இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில்



ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மதுஷன் 91 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், 20 பவுண்டரிகள் அடங்கலாக 123, டிலோசியன் 31, வியாஸ்காந் ஆட்டமிழக்காது 28, திவாகரன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிசாந்த, சேனநாயக்க ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 273 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய குருநாகல் வன்னெநாயக்க தேசிய பாடசாலை அணி இயலரசனின் பந்து வீச்சிற்கு முகம் கொடுக்க முடியாமல் திணறியதுடன் விக்கெட்டுக்களையும் விரைவாகப் பறிகொடுத்தது. இறுதியில் குருநாகல் வன்னெநாயக்க தேசிய பாடசாலை அணி 32.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றுபடுதோல்வியடைந்தது. இதில் அகலங்க 19, சந்தத்திலக 13, லியனகே 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் இயலரசன் 19 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு, திவாகரன் 11 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, நிதுஷன் 26 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

மூன்றாவது சுற்று ஆட்டத்தின் மூன்றாவது வெற்றியைப் பதிவு செய்த யாழ். மத்திய கல்லூரி அணி நான்காவது போட்டியில் வெற்றி பெறும் பட்சத்தில் காலிறுதிப்போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும். (எஸ்.பி.)

## ஜே.பி.எல். ருவெண்ரி-20

# சென்றலைட்ஸிற்கு 2ஆவது வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிறிமியர் லீக் என அழைக்கப்படும் ஜே.பி.எல். ருவெண்ரி-20 கிரிக்கெட் தொடரில் யாழ். சென்றலைட்ஸ் அணி இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் லீக் அடிப்படையில் நடைபெற்று வருகின்றன.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் சென்றலைட்ஸ் மற்றும் பருத்தித்துறை ஹாட்லியன்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய சென்றலைட்ஸ் அணி வதுசனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொண்டது. இறுதியில் சென்றலைட்ஸ் அணி 19.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வதுசனன் இரண்டு சிக்ஸர்கள், 11 பவுண்டரிகள் அடங்கலாக 62, ஜொனோசன் 20, சாள்ஸ் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ருசாந் மூன்று, சஞ்சிவன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 151 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஹாட்லிசியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் தீவன் நான்கு சிக்ஸகர்கள், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 57 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஜெரிக் மூன்று, சாள்ஸ் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக வதுசனன் தெரிவு செய்யப்பட்டார்.(எஸ்.பி.)

# கிண்ணம் வெல்வது உறுதி

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் நிச்சயம் கிண்ணத்தைக் கைப்பற்றுவேன். இந்த ஆண்டு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியபோதிலும் சொல்லிக்கொள்ளும்படியான கிண்ணங்கள் எவற்றையும் என்னால் கைப்பற்ற முடியாமல் போனது ஏமாற்றமே. எனவே, வரவிருக்கும் அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் சிறப்பாகச் செயற்பட்டு கிண்ணம் வெல்வேன் என ரென்னிஸ் உலகின் இரண்டாம் நிலை வீரர் மரியா ஷரபோவா தெரிவித்துள்ளார்.

# இரண்டாவது சுற்றில்

## றிபேக் ஸ்ரார், ஜொனியன்ஸ்

(யாழ்ப்பாணம்)

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு சாவகச்சேரி றிபேக் ஸ்ரார் மற்றும் யாழ். ஜொனியன்ஸ் அணிகள் முன்னேறியுள்ளன.

யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரின் இரு ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

முதல் போட்டியில் அரியாலை சென்றல் அணியும் சாவகச்சேரி றிபேக் ஸ்ரார் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய றிபேக் ஸ்ரார் அணி தர்சனின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் றிபேக் ஸ்ரார் அணி 26.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 194 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தர்சன் ஒரு சிக்ஸர், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 54, சுயந்தன் 47, ரதீஸ் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் துவாரகன் நான்கு, சதீஸ் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 195 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அரியாலை சென்றல் அணி 24.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 164 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் கோபிராம் 63, நிரோசன் 37, துவாரகன் ஆட்டமிழக்காது 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டிலன், சுயந்தன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் திருநெல்வேலி கிரிக்கெட் அணியும் ஜொனியன்ஸ் அணியும் மோதின.

முதலில் ஆடிய திருநெல்வேலி அணி 29 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுகளை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிவராஜா 43, விதுன் 39, அசோக் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹரிவதனன் மூன்று, லவேந்திரா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 178 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஜொனியன்ஸ் அணி 25 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சஞ்சஜன் 34, அமிர்டஜன் 37, லவேந்திரா 33, கஜீவன் 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விதுன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இவ்வெற்றிகளின் மூலம் றிபேக் ஸ்ரார், ஜொனியன்ஸ் அணிகள் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# யாழில் பிறிமா கிண்ணம் ஏற்பாடுகள் துரிதம்

(யாழ்ப்பாணம்)

பிறிமா நிறுவனத்தினால் நடாத்தப்படும் ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டித் தொடர் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதாகவும், இதற்கான ஏற்பாடுகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ள இப்போட்டித் தொடரின் முதல் ஆட்டங்கள் மாகாண ரீதியில் நடாத்தப்படவுள்ளதுடன் மாகாண மட்டத்தில் வெற்றிபெறும் அணிகள் தேசிய ரீதியிலான போட்டிக்குத் தகுதி பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாகாண மட்டப் போட்டிக்கான அணிகள் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள பாடசாலைகளின் தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் அடங்கிய அணிகள் பங்குகொள்ளும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். மாவட்ட பாடசாலைகளின் தெரிவு அணி விரைவில் அறிவிக்கப்படும் என யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (எஸ்.பி.)

# இணைய பாடங்களாகும் இணையத்தளங்கள்

ஒரு நல்ல இணையத்தளம் எப்படி இருக்க வேண்டும்? இந்தக் கேள்விக்கான பதிலை வரையறை செய்வதற்கில்லை. நல்ல இணையத்தளங்களுக்கான ஆதார அம்சங்கள் என்று பலவற்றைச் சொல்ல முடியுமே தவிர, ஒரு இணையத்தளம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று திட்டவட்டமாகக் கூற முடியாது. அதிலும் ஸ்மார்ட்போன்களுக்கான செயலிகள் செல்வாக்கு பெற்று வரும் நிலையில் இணையத்தளங்களின் எதிர்காலமே கேள்விக்குறியாகி இருக்கும்போது நிச்சயமாக இணையத்தளங்களை எந்தச் சட்டகத்திலும் அடைக்க முடியாது.




வளர் இளம் நிறுவனங்கள் ஸ்டார்ட்டப் என்று குறிப்பிடப்படுகின்றன. பெரிய அளவில் முதலீடு இல்லாமல், மனத்தில் உள்ள புதுமையான எண்ணம் வர்த்தக வெற்றிக்கு அஸ்திவாரமாக அமையுமா என சோதித்துப் பார்க்க முயலும் புதிய நிறுவனங்கள் இவ்வாறு பொருள் கொள்ளப்படுகின்றன.

இன்று இணைய உலகில் நட்சத்திர அந்தஸ்து பெற்றிருக்கும் வாட்ஸ் அப், ஸ்னாப்சொட், இன்ஸ்டோகிராம் போன்றவை இப்படி உருவான நிறுவனங்கள். தொழில்நுட்ப வெளியில் இத்தகைய வளர் இளம் நிறுவனங்கள் நூற்றுக் கணக்கில் இருக்கின்றன. இவற்றில் ஏதேனும் சில நிறுவனங்கள் வருங்கால வர்த்தக வெற்றிக்கதைகளாக உருவாகலாம் என்பதால் முதலீட்டையும் இவை பெருமளவு ஈர்த்து வருகின்றன.

ஆனால் இவற்றின் வெற்றியைக் கணிப்பது அடுத்து எந்தத் திரைப்படம் ஹிட்டாகும் என யூகிப்பதை விட கடினமானது. பல இளம் நிறுவனங்கள் முதலீட்டை விழுங்கி விட்டு காணாமலும் போயிருக்கின்றன.

தோல்வி விகிதத்தை மீறி ஸ்டார்ட்டப் நிறுவனங்கள் பெரும் ஆர்வத்தை ஈர்த்து வருகின்றன. பலர் அடுத்த வெற்றிகரமான இளம் நிறுவனத்தை நம்மால் உருவாக்க முடியுமா? என கனவு காண்கின்றனர். இவர்களுக்கு வழிகாட்டுவதற்காக என்றே எண்ணற்ற புத்தகங்கள் மற்றும் கட்டுரைகள் இருக்கின்றன. எல்லாமே தொழில்முனைவு ஜாம்பவான்களால் எழுதப்பட்டவை. புதிய நிறுவனங்களைத் துவக்க வழிகாட்டுதல் வேண்டுபவர்களுக்கு உதவக்கூடிய புத்தகங்கள் மற்றும் கட்டுரைகளை அடையாளம் காட்டுகிறது ஸ்டார்ட்டப் லோஞ்ச்லிஸ்ட் இணையத்தளம் (http://startuplaunchlist.com/).

பொதுவாக இதுபோன்ற புத்தகப் பரிந்துரை தளங்கள் எப்படி அமைந்திருக்கும்? புத்தகங்கள் மற்றும் கட்டுரைகள் வரிசையாகப் பட்டியலிடப்பட்டிருக்கும். அவற்றின் வகைக்கு ஏற்ப பிரிக்கப்பட்டிருக்கும். சமீபத்தில் சேர்ந்தவை, அதிகம் படிக்கப்பட்டவை என்றெல்லாம் அடையாளம் காட்டப்பட்டிருக்கும். ஒவ்வொரு புத்தகத்துடனும் அதன் அட்டைப் படத்துடன் அறிமுகக் குறிப்பும் இடம்பெற்றிருக்கும். விமரிசனமும் இடம்பெற்றிருக்கலாம்.

ஆனால் இந்தத் தளம், பட்டியல் எல்லாம் இல்லாமல் படிக்க வேண்டிய புத்தகம் மற்றும் கட்டுரைகளைப் பரிந்துரைக்கிறது. அதிலும் பயனாளிகளின் எதிர்பார்ப்புக்கேற்ற புத்தகங்கள் மற்றும் கட்டுரைகளை முன்வைக்கிறது. இதை எப்படிச் செய்கிறது தெரியுமா? பயனாளிகளுடன் உரையாடி அவர்கள் எதிர்பார்ப்பைத் தெரிந்துகொண்டு அதனடிப்படையில் செயற்படுகிறது.

இந்தத் தளத்தில் நுழைந்ததுமே அதன் நோக்கம் அழகாக குறிப்பிடப்பட்டு அதன் கீழ், ஒரு பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. எந்த வகையான கருத்துகளைத் தேவை என புரிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ள இந்தப் பட்டியலில் தேவையானவற்றை கிளிக் செய்தால் அவற்றுக்குப் பொருத்தமான புத்தகங்கள் மற்றும் கட்டுரைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

வழக்கமான புத்தகப் பரிந்துரைத் தளத்தின் உள்ளடக்கம் மற்றும் வடிவமைப்பை தலைகீழாகப் புரட்டிப் போட்டு பயனாளிகளின் விருப்பத்திற்கேற்ற தேர்வை முன்வைத்து ஒரு பிரத்தியேகத் தன்மையை உருவாக்கித் தருகிறது இந்த இணையத்தளம். அந்த வகையில் இது வெறும் இணையத்தளமாக இல்லாமல் இணையச் சேவையாக விளங்குகிறது. வளர் இளம் நிறுவனங்கள் பற்றிய புத்தகங்களை எல்லாம் தொகுத்தளித்து, விரும்பியதை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்வதற்கு மாறாக, உங்கள் எதிர்பார்ப்பு என்ன என்று கேட்டு அதற்கேற்ற புத்தகங்களையும் கட்டுரைகளையும் வழங்குகிறது.

இணையத்தள வடிவமைப்பின் அடுத்த கட்டப் பாய்ச்சலின் அடையாளமாக இவை இருக்கின்றன. அது மட்டும் அல்ல, தள வடிவமைப்பில் புதுமையும் படைப்பாக்கமும் தேவை எனும் கருத்தையும் இவை சொல்லாமல் சொல்கின்றன.

---

# இன்னும் கொஞ்சம் எம்.எஸ்.வி கேட்டவரெல்லாம் பாடலாம்

**- எஸ்.பார்த்தசாரதி -** **1**

**1955** இல் திரையிசையைக் கேட்க ஆரம்பித்த எனக்கு சி.ஆர். சுப்பராமன், எஸ்.வி. வெங்கடராமன், ஜி. ராமநாதன், எஸ்.எம். சுப்பையா நாயுடு, தட்சிணாமூர்த்தி, ஆர். சுதர்ஸனம், ஆர். ராஜேஸ்வர் ராவ், ஆதி நாராயணராவ், சலபதிராவ், கே.வி. மஹாதேவன் மற்றும் பலரின் இசையில் இசைத் தேடல் தொடர்ந்தது.

தமிழ்த் திரையிசை மட்டுமின்றி ஹிந்திப் பட இசை, கர்நாடக இசை மற்றும் ஹிந்துஸ்தானி இசையிலும் தொடர்ந்த இந்த 60 வருட இசை கேட்கும் அனுபவத்துடன் எம்.எஸ்.வி.யின் இசையை உள்நோக்கி அஞ்சலி செலுத்த முற்பட்டுள்ளேன்.

ஐம்பதுகளில் ஹிந்தித் திரையிசை உலகில் அனில் பிஸ்வாஸ், குலாம் மொஹம்மத், ஹேமந்த் குமார், சி. ராம்சந்தர், சித்ரகுப்த் போன்ற மூத்த இசையமைப்பாளர்களைத் தொடர்ந்து நௌஷாத், ரோஷன், எஸ்.டி. பர்மன், மதன்மோஹன், ரவி, சங்கர் - ஜெய்கிஷன், ஓ.பி. நய்யார், சலீல் சௌத்ரி, வசந்த் தேசாய் நல்ல இசையை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதற்கு முந்தைய காலகட்டத்து மாமேதை குந்தன்லால் சைகலின் இசை இந்தியா முழுவதும் பரவியிருந்தது.

இத்தகைய இந்தியத் திரையிசைச் சூழலில் விஸ்வநாதன் - ராமமூர்த்தி (வி.ரா.) புதிதாய் இணைந்து கொஞ்சம் கொஞ்சமாக தமிழ் மக்களின் பிரக்ஞையில் புக ஆரம்பித்தார்கள்.

மூத்த பின்னணிப் பாடகி ஆர். பாலசரஸ்வதி தேவி (நீல வண்ணக் கண்ணா வாடா புகழ்) ஒரு பேட்டியில் "எல்லா பாட்டுக்களும் ஹிந்தி மெட்டுகள்தான்" என்று சொன்னார். அது அப்போது தமிழ்த் திரையுலகில் இருந்த எல்லா இசையமைப்பாளர்களையும் பற்றிய அவரது கருத்து.

மற்ற மொழிகளில் வரும் நல்ல இசையைத் தமிழ் மக்கள் கேட்டு மகிழும் அனுபவத்தைக் கொடுக்க கொப்பி அடித்தால்தான் முடியும். வி.ரா.வின் திறமை என்னவென்றால் மெட்டுகளைத் தன் வசப்படுத்தி பாடல்களை அமைத்தனர். பின்னணி இசை சில சமயங்களில் அப்படியே ஒலிக்கும்.

இவர்களது இசையில் ஆரம்ப காலப் படங்களில் நினைவில் நிற்கும் சில பாடல்கள் :

எங்கே தேடுவேன் (பணம்), உனக்கெது சொந்தம் (பாசவலை, பட்டுக் கோட்டையார் பாடல்), கண் மூடும் வேளையிலே (மஹாதேவி), வருந்தாதே மனமே (போர்ட்டர் கந்தன், எஸ்.சி. கிருஷ்ணனின் அருமையான குரலில் ஒரு ரயில் பாட்டு), சின்னச் சின்ன இழை, விண்ணோடும் முகிலோடும், உனக்காக எல்லாம் உனக்காக, ஆசைக்காதலை மறந்து போ - சுப பந்து வராளி ராகம் (புதையல்), என் வாழ்வில், முகத்தில் முகம் பார்க்கலாம், வருகிறார் உனைத் தேடி, இன்று நமதுள்ளமே, மனிதன் ஆரம்பம் ஆவதும் (தங்கப் பதுமை).



1958இல் வி.ரா.வின் இசையில் வெளிவந்த -பதி பக்தி" படத்தில் உடனடியாக உள்ளத்தைக் கவர்ந்தது புதுமையாக இசையமைக்கப்பட்ட "ராக் அண்ட் ரோல்" பாட்டு (சந்திரபாபு, வி. என். சுந்தரம்). ஆனால் பட்டுக் கோட்டையாரின் வரிகளில் வந்த அப்படத்தின் அனைத்துப் பாடல்களுமே உயிரோட்டம் மிக்கவை. (திண்ணைப் பேச்சு வீரரிடம், சின்னஞ்சிறு கண் மலர், கொக்கரகொக்கரக்கோ சேவலே, இரை போடும் மனிதருக்கே, வீடு நோக்கி ஓடி வந்த என்னையே.)

ஏ. பீம்சிங் இயக்கம், சிவாஜி, ஜெமினி, சாவித்திரி, சரோஜாதேவி நடிப்பு, கண்ணதாசனின் பாடல்கள், வி.ரா. இசை என்கிற வலுவான கூட்டணியில் வரிசையாகப் படங்களும், சூப்பர் ஹிட் பாடல்களும் வெளிவந்தன.

பாகப் பிரிவினை, பாவ மன்னிப்பு, பாசமலர், பாலும் பழமும், படித்தால் மட்டும் போதுமா, பார்த்தால் பசி தீரும், பார் மகளே பார், பழனி என்று அக் கூட்டணி நீண்டது.

சாத்தனூர் அணையில் ஒரு ம.்ப்ளரை மாலையாகப் போட்டுக் கொண்டு, பி.பி.எஸ். குரலில் ஜெமினி நடித்த "காலங்களில் அவள் வசந்தம்" திரை இசைக்கு ஒரு "பொன் வசந்தம்". பாவ மன்னிப்பு படத்தின் பாடல்களின் வெற்றியைக் கொண்டாட ஒரு விழா எடுத்தது ஏ.வி.எம். சாந்தி திரையரங்கில் அதன் சொந்தக்காரரான சிவாஜியின் முதல் படமும் அதுவே.

தொடர்ந்து மலர்ந்த "பாச மலர்" - "மலர்ந்தும் மலராத பாதி மலர்" அல்ல. வி.ரா.வின் இசையில் மலர்ந்த முழு மலர். (எங்களுக்கும் காலம் வரும், பாட்டொன்று கேட்டேன், யார் யார் யார் இவர் யாரோ (பஹாடி ராகம்).

பாலும் பழமும் படத்தின் "நான் பேச நினைப்பதெல்லாம்" (சிவரஞ்சனி) என்றென்றும் தமிழர்களின் "தாம்பத்ய" சங்கீதம். "போனால் போகட்டும் போடா" பாடல் நெடுக "ஓஹோஹோ" என்று வரும் மயான பயத்தை ஏற்படுத்தும் ஹம்மிங் இசையமைப்பின் மாஸ்டர் ஸ்ட்ரோக். இப்படத்தின் ஹிந்தியாக்கமான "சாத்தி"யில் நௌஷாத் இந்த உணர்வைத் தரவில்லை.


ஜெயகாந்தனின் (பீம்சிங்) சில நேரங்களில் சில மனிதர்களில் கண்டதைச் சொல்லுகிறேன், வேறு இடம் தேடிப் போவாளோ பாடல்கள் அப்படத்தின் தரத்துக்கு இணையாக அமைந்தன.

பழனி படத்தில் வந்த "ஆறோடும் மண்ணில் என்றும் நீரோடும்" ஹரி காம்போதியில் அமைந்த தெம்மாங்கு. 1970இல் வெளிவந்த "பாதுகாப்பு" படத்தில் ஜெயலலிதா நடனமாடும் "ஏனிந்த மயக்கம்" தனஸ்ரீ ராகத்தில் குறிப்பிடத்தக்க ஒரு பாடல்.

ஆனால் கர்நாடக வெள்ளம் கரை புரண்டு

# சின்னச் சின்ன...

### மாறிவிட்ட பழமொழி



பழமொழிகளில் அதன் அர்த்தம் தெரியாமல் திரிந்துள்ளன. “காரியம் ஆகக் கழுதையானாலும் காலைப் பிடி” என்பது பழமொழி. சும்மா நிற்கும் கழுதையின் மேல் சுமையை ஏற்றினால் அது சுமையை உதறிவிட்டு ஓடிவிடும். எனவே, கழுதையின் முன்னங்கால்களை முதலில் சேர்த்து பிடித்து அமைதிப்படுத்துவர். அதற்காக கழுதையின் கால்களை பிடித்திட வேண்டும். அதன் பின்னரே சுமையினை ஏற்றமுடியும். இதனால்தான் இந்த பழமொழி வந்தது. காரியம் ஆக வேண்டுமானால் யார் காலையும் பிடிக்கலாம் என்ற அர்த்தத்தில் இது திரிந்துள்ளது.

### அடி உதவுதல்




“அடி உதவுகிறாற்போல் அண்ணன் தம்பி உதவமாட்டான்!” அடி என்பது இங்கு நிலத்தடி. அதாவது பூமியைக் குறிக்கும் சொல். பூமித்தாய் உதவுகிறாற்போல், நம் உறவுகள்கூட உதவ முடியாது என்று பூமித்தாயின் மேன்மையை விளக்கும் பழமொழி, நம் நாட்டில் பண்டைக்காலம் முதல் விவசாயத்தையே பெரும்பாலும் தொழிலாகக் கொண்டிருந்ததால், நம் உழைப்பையும், முதலீட்டையும் நிலத்தில் போட்டால், அது நிச்சயம் பலன் தரும் என்ற அர்த்தம்.

### ஆலாய்ப் பறப்பது



“ஆல்” என்பது ஒரு பறவையின் பெயர். அப்பறவையின் இயல்பு எப்போதும் பறந்து கொண்டே இருப்பது. அதன் இனப்பெருக்கம் உட்பட அனைத்துச் செயல்களும் பறந்தபடியேதான். எப்போதோ ஒருமுறை மரத்தில் வந்து உட்கார்ந்துவிட்டு உடனே எழும்பிப் பறந்துவிடும். தரையைத் தொடுவது என்பதே இல்லை. விந்தையான இந்த “ஆல்” பறவை குறித்து நமது பழந்தமிழ் இலக்கியங்களில் குறிப்புகள் உள்ளன. இப்பறவையை முன்வைத்துதான் “ஆலாய்ப் பறக்கிறான்” என்று வழக்கு மொழி நடைமுறைக்கு வந்திருக்கிறது.

### கழுதைப்பாலின் விலை!



அழுத பிள்ளை சிரிக்குது, கழுதைப் பாலைக் குடிக்குது! இப்படியொரு சொல்லாடலை எமது சிறுவயதில் கேட்டிருப்போம். (கழுதைப் பாலை என்பதற்குப் பதிலாக “கழுதை மூத்திரம் குடிக்குது” என்றும் சொல்வதுண்டு) ஆனால் அர்த்தம் தெரிந்திருக்காது. “அழுத பிள்ளையாவது கழுதைப் பாலைக் குடிப்பதாவது” என அசூசையால் அருவருப்புப் பட்டிருப்போம். ஆனால் இந்தக் கூற்றில் ஓர் உண்மை இருக்கிறது. கழுதைப்பாலில் மிகச் சிறந்த நோய் எதிர்ப்புச் சக்தி இருக்கிறது என்றொரு நம்பிக்கை தமிழகத்தில் ஆண்டாண்டு காலமாக நிலவி வருகிறது. அதனால் அங்குள்ள மக்களில் ஒரு பகுதியினர் பிறந்த பச்சிளம் குழந்தைக்கு தாய்ப்பாலுடன் கழுதைப் பாலையும் கொடுத்து வருகின்றனர். இதில் ஒரு முக்கியமான விடயம் என்னவெனில், “கழுதைப்பால் தானே, அதற்கு என்ன பெறுமதி” என நாம் எண்ணிவிடக்கூடாது. ஒரு லீற்றர் கழுதைப்பாலின் விலை என்ன தெரியுமா? 5,000 ரூபாவிலிருந்து 6,000 ரூபா வரையாகும்.

### பாரசீகப் பழமொழி



வீட்டில் விரித்திருக்கும் ரத்தினக் கம்பளத்தில் ஒரு பொத்தல் இருந்தால் நல்ல வேலைக்காரன் அதன் மேல், தன்னுடைய மேல் துண்டைப் போட்டு, விருந்தாளியாக வந்தவர்கள் கண்ணுக்கு அப்பொத்தல் படாதவாறு மூடிவிடுவான். மூட வேலைக்காரனோ அந்தப் பொத்தலைப் பற்றி கூப்பாடு போட்டு, அதைப் பார்க்காதவர்களும் பார்க்கும்படி பண்ணுவான். இது ஒரு பாரசீகப் பழமொழியின் கருத்து.


### காவடி என்றால் என்ன?



காவடி என்றால் என்ன? அதன் உட்கருத்து யாது? சூரபத்மனுடைய ஆசிரியன் இடும்பன். அவன் அகஸ்தியருடைய ஏவலின்படி கயிலாயத்திலிருந்து சிவமலை, சக்தி மலை என்ற இரு மலைகளையும் காவடியாக கட்டிக் கொண்டு வந்தான். அது முதல் காவடி வழிபாடு ஏற்பட்டது. பாரமான பொருளை இரண்டாகப் பிளந்து தோளில் சுமந்து வருவதற்குக் காவடி என்று பொருள். பாவச்சுமைகளை ஆண்டவன் திருவடியில் அர்ப்பணித்து விடுவதே இதன் உட்பொருள்.

**(‘வானுறை விருந்து’ நூலிலிருந்து.)**

### தாம்பூலம் தரிக்கலாமா?



தாம்பூலம் போடும் பழக்கம் தொன்றுதொட்டு இருந்து வரும் ஒன்றாகும். தாம்பூலத்தில் வெற்றிலையே கதாநாயகன். வெற்றிலை புராதன காலம் தொட்டு மருத்துவப் பொருளாக மட்டுமின்றி, மங்கலப் பொருளாகவும் கருதப்பட்டு வருகிறது. தெய்வங்களுக்குப் படைப்பது, பெரிய மனிதர்களைச் சந்திக்கும் போது கொடுத்துப் பரிமாறிக் கௌரவிப்பது என வெற்றிலை பல மங்கலகரமான காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்த வெற்றிலையில் கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்து, விற்றமின் பி, விற்றமின் சி ஆகிய சத்துகள் அடங்கியுள்ளன. அந்த இரகசியத்தை அறிந்துதான் நம்மவர்கள் அதை உமிழத் தொடங்கினார்களோ என்னவோ? இந்த வெற்றிலைக்கு இலங்கையில் ஒருமுறை தட்டுப்பாடு வந்தபோது, இன்று பிரதமராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க, “வெற்றிலைக்குப் பதிலாக சுவிங்கம் சாப்பிடுங்கள்” என நாட்டு மக்களுக்குச் சொல்லி தனது அசட்டுத்தனத்தை வெளிப்படுத்தினார்!

### தங்கத்தை காலில் அணியலாமா?



தங்கத்தில் இலட்சுமி குடியிருப்பதாக நம்புவதால் அதை காலில் அணிய வேண்டாம் என்று கூறப்படுகிறது. அதேநேரம் தங்கம் நிரந்தரமாக காலில் அணியும் போது வாதம் வர வாய்ப்புண்டு என்று மருத்துவத் துறை கண்டறிந்துள்ளது. மேலும் சந்தனம், திருநீறு, குங்குமம் முதலியவற்றை இடுப்புக்கு கீழே அணியக்கூடாது என்றும் போதிக்கப் பட்டுள்ளது. இதற்கும் விஞ்ஞான அடிப்படையில் விளக்கம் உண்டு. சந்தனம் பொதுவாக ஒரு குளிரச்செய்யும் பொருள். இதை இடுப்புக்குக் கீழ் மிகையாகப் பூசினால் அது இன விருத்தித் திறனைப் பாதிக்கும் என்று கூறப்படுகின்றது. பிரம்ம முகூர்த்தத்தில் சந்தனமும். விடியற்காலை குங்குமமும், மாலைப் பொழுதில் திருநீறும் அணிவது நரம்பு உறுதிக்கும், நோய் நிவாரணத்துக்கும் உத்தமம் என்று சூரிய ஒளியையும் மனித உடலையும் சம்பந்தப்படுத்தி செய்யப்படும் ஆராய்ச்சிகள் வெளிப்படுத்தியுள்ளன.

**(‘ஓலைச்சுவடி’ என்ற நூலிலிருந்து)**

---

ஓடியது பி. ஆர். பந்துலு - வி.ரா. இணையில் உருவாகி, இவர்களால் முடியுமா என்ற டி.எம்.எஸ் உட்பட பலரின் பலத்த சந்தேகங்களுக்கு இடையே வந்த “கர்ணன்” படத்தில்.

என்னுயிர்த் தோழி (அமீர் கல்யாணி),
உள்ளத்தில் நல்ல உள்லம் (சக்ரவாகம்)
கண்ணுக்குக் குலமேது (பஹாடி)
கண்கள் எங்கே? (சுத்த தன்யாசி)
இரவும் நிலவும் (ஹம்ஸநாதம்)
போய்வா மகளே (ஆனந்த பைரவி)
மஹாராஜன் உலகை (கரஹரப்ரியா)
மரணத்தை எண்ணி (நாட்டை)
மன்னவன் பொருள்களை (மோஹனம் - டி.எம்.எஸ்.),
மழை கொடுக்கும் கொடை (ஹிந்தோளம் - சீர்காழி),
நாணிச் சிவந்தன மாதரார் கண்கள் (கானடா - திருச்சி லோகநாதன்),
என்ன கொடுப்பான் (ஹம்ஸாநந்தி - பி.பி.எஸ்.),
ஆயிரம் கரங்கள் நீட்டி (சக்ரவாகம்)
சங்கினால் பால் கொடுத்தால் (நீலாம்பரி - பி.பி.எஸ்.)

பந்துலுவுக்கு மிகவும் பிடித்த மஹாகவி பாரதிக்கு மிகவும் பிடித்த வாழ்த்துச் சொல்லைப் பெயராய்க் கொண்டு வந்த “பலே பாண்டியா”விலும் வி.ரா பந்துலு கூட்டணி வெற்றி பெற்றது.

**(தொடரும்)**

---

# அழகுக்கு சில குறிப்புகள்

❁ தேமலுக்கு நான்கு பல் வெள்ளைப் பூண்டை எடுத்து வெற்றிலையுடன் சேர்த்துக் கசக்கிப் பிழிந்து, அந்தச் சாற்றைத் தடவினால், தேமல் மறையும் தேகம் மினுமினுப்பாகும்.

❁ சில பெண்களுக்கு மீசை வளர்ந்து, அவர்களது அழகைக் கெடுக்கும். இவர்கள் கோரைக்கிழங்கு, வசம்பு, பூலாங்கிழங்கு, கஸ்தூரி மஞ்சள் - இவை அனைத்தையும் மாவாக அரைத்துக்கொண்டு, குளிக்கும்போது சிறிது பூசிக் குளித்து வந்தால், நாளடைவில் வேண்டாத முடிகள் உதிர்ந்துவிடும்.

❁ கரட், உருளைக்கிழங்கு இவ்விரண்டையும் நன்கு அரைத்து முகத்தில் பற்றுபோல போட்டு, சிறிது நேரம் கழித்து நல்ல குளிர்ந்த நீரில் அலம்பினால், கண்களின் கரு வளையங்கள் மறைந்து கண்கள் அழகு பெறும்.

❁ இரவில் தூங்கச் செல்லும் முன்பு சந்தனமும், பன்னீரும் கலந்து உதடுகளின் மேல் சீராகத் தடவி வந்தால், உதடுகள் நல்ல நிறம் பெற்று அழகு கூடும்.

❁ கழுத்தில் ஏற்படும் கருமையைப் போக்க, கழுத்தை பசும்பாலில் நன்றாகக் கழுவிக்கொண்டு, பின் புதினா, எலுமிச்சம் பழச் சாற்றைத் தடவி வர, நாளடைவில் கருமை மறைந்து அழகு சேரும்.



❁ உள் ஆடையையும், மேலாடையையும் இறுகக் கட்டுவதால், இடுப்பில், ஆடை கட்டும் இடத்தில் கறுப்பாகி விடும். அந்தக் கறுப்பு நீங்க, அறுகம்புல்லுடன் மஞ்சள், மருதாணி இலையைச் சேர்த்து மைபோல் அரைத்து, இரவில் தடவி வந்தால், தோலின் நிறம் பழைய தோல் நிறத்தைப் பெறலாம்.

❁ முதுகுப் பகுதியில் வெயில் படும் இடத்தில் எல்லாம் கறுத்துவிடும். இந்தக் கருமையைப் போக்க வேண்டுமானால், எலுமிச்சம் பழத்தோலை நன்கு தேய்த்து, அரை மணி நேரம் ஊறிய பின் குளித்து வர, சில நாள்களில் கருமை மாறி, முன் மாதிரியான தோலைப் பெறலாம்.


❁ ஊமத்தை பிஞ்சை நன்கு அரைத்து அதனுடன் உமிழ்நீரை (எச்சில்) கலந்து தலையில் புழுவெட்டு ஏற்பட்ட இடத்தில் பூசிவர அந்த இடத்தில் முடிகள் முளைக்கும்.

❁ முகத்தில் பருக்கள் உடைந்த பின் ஏற்படும் தழும்புகள் மறைய வேப்பிலையைக் கொதிக்க வைத்த நீரில் தினசரி முகத்தைக் கழுவ வேண்டும்.


❁ எலுமிச்சைச் சாறில் சிறிது பார்லி தூளைக் கலந்து முகம், கழுத்து, கைகால்களில் பூசி கால்மணி நேரம் ஊறிய பின் கழுவினால் சருமம் பளிச் என இருக்கும்.

❁ பச்சைப் பயறு, பயத்தம் பருப்பு இரண்டும் சேர்த்த கஞ்சியை மோரில் அல்லது பாலுடன் சேர்த்துக் குடித்தால் மேனி எழில் தரும். சருமமும் பளபளப்பாக இருக்கும்.

# நிகழ்வுகளின் பதிவுகள்....














இன்று நடைபெறுகின்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பெட்டிகள் நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் இருந்து யாழ்.குடா நாட்டிலுள்ள அனைத்து வாக்களிப்பு நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டபோது...
(படங்கள்: ஆர்.இராஜகுமார், 25)








யாழ்.தீவகம் வேலணை 'வங்களாவடி அருள்மிகு ஸ்ரீ வள்ளி தேவ சேனா சமேத முருகப் பெருமானின் இரதோற்சவம் அண்மையில் இடம்பெற்றபோது...





மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாதத் திருவிழா நேற்றுமுன்தினம் காலை 6.30 மணிக்கு பாப்பரசரின் இலங்கைக்கான தூதுவர் பேராயர் நியுயான் வன் டெட் ஆண்டகை தலைமையில் இடம்பெற்ற போது...

# இலஞ்சம் கொடுத்து வாக்கு வேட்டை முயற்சி பொலிஸாரால் முறியடிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழில் வாக்காளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட இருந்த வீட்டு சமையல் உபகரணப் பொருட்கள் ஒரு தொகுதி மீட்கப்பட்டுள்ளன என தெல்லிப்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

அளவெட்டி, கும்பிளாவளை பிள்ளையார் கோவிலுக்கு பின்புறமாக உள்ள வீடொன்றில் இருந்தே குறித்த பொருட்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பொருட்கள் பெரியளவிலான 24 பெட்டிகளில் அடைக்கப்பட்டு வாக்களர்களுக்கு இலவசமாக வழங்கவென பதுக்கி வைக்கப்பட்டிருந்த வேளையிலேயே பொலிஸாரால் அவை மீட்கப்பட்டுள்ளன.

யாழில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரே வாக்களர்களுக்கு இலவசமாக வழங்கவென குறித்த பொருட்களை வீட்டில் பதுக்கி வைத்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

# நித்திரையில் போத்தல் குத்து ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நித்திரையில் இருந்த சமயம் போத்தல் குத்துக்கு இலக்கான நபர் ஆபத்தான நிலையில் பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


கரவெட்டி ஸ்ரீ சாரதா வீதியில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த கந்தன இரத்தினம் (வயது 60) என்பவரே போத்தல் குத்துக்கு இலக்காகியுள்ளார்.

அன்றைய தினம் மாலையில் சகோதரனுடன் இவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் அதனை அடுத்தே நித்திரையில் வைத்து அவர் போத்தலால் குத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயங்களுக்குள்ளான அவரது அலறல் சத்தத்தைக் கேட்டு அயலவர்கள் ஓடி வந்த சமயம் தாக்கிய அவரது சகோதர் அங்கிருந்து தப்பி தலைமறைவாகி விட்டதாக அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்தை அடுத்து வைத்தியசாலைக்குச் சென்ற பொலிஸார் பாதிப்புக்குள்ளான நபரிடம் வாக்குமூலத்தை பெற்றுக் கொண்டுள்ளதோடு இத்தாக்குதலை நடாத்திய சந்தேக நபரை தேடிவருகின்றனர். (18)

# மாலுசந்தி வீதி விபத்தில் மூவர் படுகாயம்



(நெல்லியடி)

முச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் மூவர் பாடுகாயமடைந்துள்ளனர். நெல்லியடி, மாலுசந்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இவ் விபத்தில் இரு வாகனங்களும் மோசமாக சேதமடைந்துள்ளன.

இவ்விபத்தை அடுத்து காயங்களுக்குள்ளான மூவர் மத்திகை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (18)

# மடு பண்டிகைக்காக அமைக்கப்பட்ட 26 வர்த்தக நிலையங்கள் மீது வழக்கு

(மன்னார்)

மடு திருத்தலத்தில் பண்டிகைக்காலத்தை முன்னிட்டு பக்தர்களின் நலன் கருதி அங்கு அமைக்கப்பட்டிருந்த உணவகங்களில் சுகாதார சீர் கேட்டுடன் இயங்கி வந்த உணவகங்கள், இறைச்சி விற்பனை நிலையங்கள் என 26 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நேற்றுமுன்தினம் மடு சுற்றுலா நீதிமன்றத்தில வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு குறித்த வர்த்த நிலைய உரிமையாளர்களிடம் தண்டம் அறவிடப்பட்டுள்ளதோடு, எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மடு திருத்தலத்தின் ஆவணி மாதத் திருவிழவை முன்னிட்டு கடந்த 06 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை மடு திருத்தலப் பகுதியில் பல்வேறு வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கடந்த 6 ஆம் திகதி முதல் நேற்றுமுன் தினம் வரை மடு திருத்தல பகுதியிலுள்ள உணவகங்கள், விற்பனை நிலையங்கள், இறைச்சி விற்பனை நிலையங்கள் போன்றவற்றிற்கு சென்று திடீர் சோதனை நடவடிக்கைகளை மடு சுகாதார வைத்திய அதிகாரி பி.ஒஸ்மன் டெனி தலைமையிலான மடு பொது சுகாதார பரிசோதகர்கள் குழுவினர் மேற்கொண்டனர்.

பழுதடைந்த உணவு விற்பனை செய்தல், மனித பாவனைக்கு உதவாத உணவுப்பொருட்களை வைத்திருந்தமை, காலாவதியான பொருட்களை வைத்திருந்தமை, சுகாதார சீர் கேட்டுடன் இறைச்சி விற்பனை செய்தல் என 26 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலையில் நேற்றுமுன் தினம குறித்த 26 வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக மடு சுற்றுலா நீதி மன்றத்தில் வழக்கு விசாரணை இடம் பெற்றது.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவிட்டதோடு குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

# மஹா கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி தனங்கிளப்பு மறைக்காடு அருள்மிகு ஸ்ரீ கந்தசாமி தேவஸ்தான ஜீர்னோத்தாரண அஷ்டபந்தன பஞ்சகுண்ட மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் புதன்கிழமை கர்மாரம்ப கிரியைகள் ஆரம்பமாகி மறுநாள் வியாழக்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்தல் இடம் பெறவுள்ளது. வெள்ளிக்கிழமை இடம்பெறும் கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ தே.கௌரிசங்கர் குருக்கள் பிரதம குருவாகக் கலந்து கொண்டு இக்கும்பாபிஷேகத்தை நடாத்தி வைக்கவுள்ளார்.

பக்த அடியார்கள் அனைவரையும் எண்ணெய்க்காப்பு சாத்தலிலும், மஹாகும்பாபிஷேகத்திலும் கலந்து கொண்டு இறையாசியை பெற்றுக்கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ)

❖ ❖ ❖

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அருள்மிகு கற்குழி கந்தசுவாமி தேவஸ்தான புனராவர்த்தன நவ குண்ட மஹா யாக அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மறுநாள் புதன்கிழமை மாலை 3 மணி வரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தல் இடம்பெறும்.

மறுநாள் வியாழக்கிழமை காலை 08.04 மணி முதல் 9.30 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் இடம் பெறவுள்ளது. இக்கும்பாபிஷேகம் சிவிஸ்ரீ தேவபால பிரசன்ன குருக்கள் தலைமையில் சிறப்பாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# போசாக்குப் பொதிகளை வழங்குவதில் கர்ப்பவதிகள் அலைக்கழிப்பு



(யாழ்ப்பாணம்)

கர்ப்பவதிகளுக்கு அரசாங்கம் வழங்கும் போசாக்குப் பொதியைப் பெறுவதற்காகப் பெரு, மளவிலானோர் அலைச்சலுக்கு உள்ளாக வேண்டி இருப்பதாகத்தெரியவருகிறது.

கர்ப்பவதிகளின் போசாக்கை அதிகரிப்பதற்கு அரசாங்கம் 10 மாதங்களுக்கு மாதாந்தம் 2 ஆயிரம் ரூபா வீதம் போஷாக்கு உணவை வழங்குகின்றது. இது பல நோககுக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக முத்திரைக்கு விநியோகிக்கப்படுகின்றன.

வவுனியாவில் இந்த உணவுப் பொருட்கள் சீரான முறையில் வழங்கப்படுவதில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டது. இதனால் உணவுப் பொருட்களை வழங்கும் பொறுப்பை அரச அதிபர் தனியார் ஒருவரிடம் ஒப்படைத்தார். குறித்த தனியார் நகரத்தில் உள்ள தனது வர்த்தக நிலையத்திற்கு வந்து பொருட்களைப் பெறுமாறு கூறியிருக்கிறார்.

இதனால் பல கர்ப்பவதிகள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். உணவுப் பொருளைப் பெறுவதற்காக சுமார் 10 தொடக்கம் 28 கிலோ மீற்றர் தூரம் அவர்கள் பயணிக்க வேண்டியுள்ளது. அத்துடன் குறித்த வர்ததக நிலையத்தில் கால்கடுக்க வரிசையாக நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

இந் நிலையில் பலரது முறைப்பாட்டின் அடிப்படையில் நேற்று முன்தினம் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்து இவ் உணவுப் பொதியை வழங்க அத் தனியார் வர்த்தக நிலையம் நடவடிக்கை எடுத்தது.

இதன் காரணமாக கர்ப்பிணிகள் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வருகை தந்து நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்ததுடன் சன நெருக்கடிக்கும் உள்ளாகினர்.

இதேவேளை அங்குமிங்குமாக அலைககழிக்கப்பட்ட கர்ப்பவதிகள் நீண்ட நேரத்தின் பின்னர் காத்திருந்து போசாக்கு உணவுப பொதியை பெற்றுச் சென்றிருந்தனர்.

இதன் போது கருத்து தெரிவித்த கர்ப்பிணிப் பெண்கள், முனனர் எமது கிராமத்தில் அல்லது கிராமத்திற்கு அருகில் உள்ள பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களில் வைத்து முத்திரைக்கு போசாக்கு உணவை வழங்கியிருந்தனர் அவை தரமான பொருட்களாகவும் இருந்தன.

எனினும் திடீர் என இத்திட்டம் நிறுத்தப்பட்டு தனியாரிடம் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் தமது வர்த்தக நிலையத்துக்கு வரச்சொன்னார்கள்.

தற்போது சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையில் வைத்து வழங்குகின்றார்கள். நாம் இப்பொருட்களை பெறுவதற்கு நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி ஏற்படுகின்றது. நாம் கர்ப்பிணிகள் என்பதனை மறந்து செயற்படுகின்றனர். இரண்டாயிரம் ரூபா பெறுமதியான பொருளை பெற 400 முதல் 800 ரூபா வரை செலவு செய்து வந்து பல மணி நேரம் காத்திருக்கின்றோம் என தெரிவித்தனர்.

# திருவெண்காடு சித்திவிநாயகரின் வருடாந்த மஹோற்சவம்

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளைமறுதினம் 19ஆம் திகதி சாந்திபூசையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் விசேட பூசை, ஆராதனைகள் நடைபெறும்.

இரண்டாம் நாளான 20 ஆம் திகதியன்று கொடியேறி பத்தாம் நாளான 27 ஆம் திகதியன்று வேட்டைத் திரு விழாவும் அதனை அடுத்து மறுநாள் 28 ஆம் திகதி தேர்த்திரு விழாவும் இடம்பெற்று 12 ஆம் நாளான 29 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் விழா நிறைவுபெறும்.

உற்சவ தினங்களில் தினமும் மகேஸ்வர பூசையும் அன்னதானமும் இடம் பெறுவதோடு தினமும் விசேட ஆன்மிக சொற்பொழிவும் இரவு 07.30 மணியிலிருந்து 08.30 மணி வரை நடைபெறுமென ஆலய நிர்வாகம் வெளியிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த

# 8 ஆவது நாடாளுமன்ற தேர்தல் இன்று

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எட்டாவது நாடாளுமனறத் தேர்தல் இன்று நடைபெறுகின்றது. 196 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான இந்தத்தேரதலில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 6,151 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் யாரைத் தெரிவு செய்வது என்ற தீர்ப்பை மக்கள் இன்று வழங்கவுள்ளனர்.

சுயாதீனமானதும் நீதியானதுமான தேர்தலை நடாத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளதாகவும் காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரையில் மக்கள் வாக்களிக்க முடியுமெனவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்எம் மொஹமட் தெரிவித்தார்.

225 நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்களில் 196 பிரதிநிதித்துவங்களை நேரடியாகத் தெரிவு செய்வதற்காக 6 ஆயிரத்து 151 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ள நிலையில் 2014 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் பிரகாரம் ஒரு கோடியே 50 இலட்சத்து 44 ஆயிரத்து 490 வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக 12ஆயிரத்து 314 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆயிரத்து 600 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதேவேளை நாடளாவிய ரீதியில் ஒரு இலட்சத்து 95 ஆயிரம் அரச ஊழியர்கள் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ளதோடு 75 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 80 பேரும் தெற்காசிய தேர்தல்கள் முகாமையாளர்கள் ஒன்றியத்தைச் சேர்ந்த 29 பேரும் ஆசிய தேர்தல்கள் அதிகாரிகள் ஒன்றியத்தைச் சேர்ந்த 3 பேரும் பொது நலவாய அமைப்பைச் சேர்ந்த 15 பேரும் ஈடுபடவுள்ளனர்.

அதேவேளை உள்நாட்டைச் சேர்ந்த சுயாதீன தேர்தல் அமைப்புக்களான கபே, பவ்ரல், ட்ரான்ஸ்பரன்ஸி உட்பட பல்வேறு அமைப்புக்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளன.

இன்று நடைபெறுகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து 196 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதுடன் கட்சிகள் பெறுகின்ற வாக்குகளின் அடிப்படையில் தேசியப்பட்டியல் மூலம் 29 உறுப்பினர்களும் நாடாளுமனறத்துக்கு தெரிவு செய்யப்படுவார்கள். அதனடிப்படையில் 225 பேர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு மாவட்டத்திலிருந்து 19 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதுடன் இம்மாவட்டத்திலிருந்து 15,86,598 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்திலிருந்து 18 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு 16,37,537 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள ளனர்.

களுத்துறை மாவட்டத்திலிருந்து 10 உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய அம்மாவட்டத்தில் 89,7,349 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் 12 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 10,49,160 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

மாத்தளை மாவட்டத்தில் 05 உறுப்பினர்களை தெரிவு செய்ய 37,9,675 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் 08 உறுப்பினர்களை தெரிவு செய்ய 53,4,190 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

காலி மாவட்டத்தில் 10 உறுப்பினர்களை தெரிவு செய்ய 81,9,666 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மாத்தறை மாவட்டத்தில் 08 உறுப்பினர்களை தெரிவு செய்ய 62,3,818 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில 07 உறுப்பினர்களை தெரிவு செய்ய 46,2,911 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 07 உறுப்பினர்களை தெரிவு செய்ய 52,9,239 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வன்னி மாவட்டத்தில் 06 உறுப்பினர்களை தெரிவு செய்ய 25,3,058 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 05 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 36,5,167 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

திகாமடுல்ல மாவட்டத்தில் 7 உறுப்பினர்களை தெரிவு செய்ய 46,5,757 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 04 உறுப்பினர்களை தெரிவு செய்ய 29,6,852 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

குருநாகல் மாவட்டத்தில் 15 உறுப்பினர்களை தெரிவு செய்ய 12,66,443 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் 08 உறுப்பினர்களை தெரிவு செய்ய 55,3,009 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில் 09 உறுப்பினர்களை தெரிவு செய்ய 63,6,733 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

பொலநறுவை மாவட்டத்தில் 05 உறுப்பினர்களை தெரிவு செய்ய 30,7,125 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் 08 உறுப்பினர்களை தெரிவு செய்ய 62,0,486 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மொனராகலை மாவட்டத்தில் 5 உறுப்பினர்களை தெரிவு செய்ய 33,9,797 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் 11 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 77,0,042 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில் 09 உறுப்பினர்களை தெரிவு செய்ய 64,9,878 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

## வவுனியாவில் காற்றுடன் மழை 4 வீடுகள் சேதம்

(வவுனியா)

வவுனியாவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை பெய்த காற்றுடன் கூடிய மழையால் நான்கு வீடுகள் சேதமடைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

கடும் காற்று, மின்னல் மற்றும் மழை காரணமாக 4 வீடுகள் பகுதி யளிவில் சேதமடைந்துள்ளது. மின்னல் தாக்கத்தின் காரணமாக மருக்காரம்பளைப் பிரதேசத்தில் ஒரு வீடும், கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக ஸ்கந்தபுரத்தில் ஒரு வீடும், ஈச்சங்குளத்தில் இரு வீடுகளும் சேதமடைந்துள்ளன. இதன் காரணமாக நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 15 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வவுனியாவில் பல பகுதிகளிலும் கடும் காற்று காரணமாக மரங்கள் முறிவடைந்துள்ளதுடன் மின்சாரவயர்களும் அறுந்து மின்விநியோகமும் தடைப்பட்டது.

## பாதாள உலகக் குழு குறித்து முறைப்பாடுகள் எதுவும் இல்லை

பாதாள உலகக் குழுக்கள் தொடர்பில் முறைப்பாடு எதுவும் செய்யப்படவில்லை என தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில உள்ளூர் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் பாதாள உலகக் குழு செயற்பாடுகள் குறித்து குற்றம் சுமத்தியுள்ளன.

எனினும் தேர்தல்கள் பணிகளில் பாதாள உலகக் குழுவினர் பங்கேற்றுள்ளமை தொடர்பில் முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை என பிரதித் தேர்தல் ஆணையாளர் ஆர்.எம். ஏ.எல்ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் பணிகள் சீரான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் குறித்து முறைப்பாடுகளோ அல்லது வேறும் அறிக்கைகளோ கிடைக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கணவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள

# வீசா அனுமதி மறுக்கப்பட்டதால்

# மனமுடைந்த பெண் தற்கொலை முயற்சி

கடந்த மாதம் அவுஸ்ரேலியாவில் அகால மரணமடைந்த கணவரின் இறுதிக்கிரியை நிகழ்வுகளில் கலந்துகொள்ள இலங்கையிலுள்ள ஆஸி. தூதரகம் வீசா அனுமதி நிராகரித்ததனால் மனமுடைந்த பெண் ஒருவர் தூக்க் மாத்திரை உட்கொண்டு தற்கொலைக்கு முயற்சித்துள்ள சம்பவம் மட்டக்களப்பில் இடம் பெற்றுள்ளது.

இது குறித்து தெரிய வருவதாவது,

கடந்த மாதம் 17 ஆம் திகதி அவுஸ்ரேலியா, சிட்னியின் கிறைஸ் ரைன்ஸ் நகரில் வசித்து வந்த மட்டக்களப்பினைச் சேர்ந்த நவரட்ணம் அஜந்தன் என்னும் புகலிடக் கோரிக்கையாளர் படுகையறையினுள் விபத்து காரணமாக அகால மரணமடைந்துள்ளார்.

தற்போது அவுஸ்ரேலியாவில் நிலவி வரும் அதிக குளிர் காரணமாக தமது படுக்கையறையினுள் இலத்திரனியல் வெப்பமாக்கியுடன் இறைச்சி வாட்டுவதற்காக பயன்படுத்தப்படும் சூடான மணிகளையும் (charcoal heat beads) வைத்து உறங்கியுள்ளார். இதன்போது வெளியான காபன் மொனோ ஒக்சைட் (carbon monoxide toxicity) என்னும வாயு வெளியான நிலையிலேயே அவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

அஜந்தனின் உடலை இலங்கைக்கு கொண்டு செல்வதனால் அவரது குடும்பத்திற்கு ஆபத்து ஏற்படலாம் என்பதால் அவரது மனைவி மற்றும் இரு பிள்ளைகளுக்கான வீசா பெறுவதற்காக விண்ணப்பித்த போது அவ்விண்ணப்பம் அவுஸ்ரேலிய குடிவரவு அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டது. மீண்டும் அஜந்தனின் மனைவி தன்னுடைய இரண்டு வயது கைக்குழந்தையை இலங்கையில் உறவினர்களுடன் விட்டு இறுதிக் கிரியைகளுக்காக தனது மகனை மட்டும் அழைத்துச்செல்வதற்காக விண்ணப்பித்த போதிலும் இரண்டாவது தடவையும் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

பின்னர் அஜந்தனின் உடல் நாளை மறுதினம் புதன்கிழமை lidcombe rook wood cemetery இல் பி.ப. 3 மணி தொடக்கம் பி.ப. 4 மணிவரை பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 4 மணியளவில் தகனக் கிரியைகள் மேற்கொள்ள நண்பர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமது கணவரது உடல் இலங்கைக்கு கொண்டு வர முடியாததுடன் தாமும் இறு திச்சடங்கிற்காக அவுஸ்ரேலியா செல்லமுடியாத நிலையினை எண்ணி வருந்திய அஜந்தனின் மனைவி மன முடைந்து தூக்க மாத்திரை உட்கொண்டு தற் கொலைக்கு முயற்சித்துள்ளார். தற்போது அஜந்தனின் மனைவி ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சுற்றுலாப் பயணிகளுக்கு சீனா பயண எச்சரிக்கை

இலங்கை வந்துள்ள சீன சுற்றுலாப் பயணிகளுக்கும் பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இடம் பெறும் விபத்துக்கள் காரணமாக இவ்வாறு பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு அதிகளவில் சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்ளும் நாடுகளில் சீனா இரண்டாம் இடத்தை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஏழு மாதங்களில் 46 சுற்றுலாப் பயணிகள் விபத்துக்குள்ளாகியுள்ளனர். நீரில் மூழ்கி இரண்டு பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

30 களவுச் சம்பவங்கள், ஒரு பாலியல் வன்முறை, ஒரு பாம்பு தீண்டல், ரயிலில் இருந்து விழுந்த இரண்டு சம்பவங்கள் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. தங்க ஆபரணங்கள் திருடிய குற்றச்சாட்டின் அடிப்படையில் இரண்டு சீனர்களுக்கு நாடு திரும்பத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

31. நர்மதாவின் வயது அவளின் தம்பியின் வயதை விட 7 வருடங்கள் கூட தம்பியின் வயது 12 எனின் நர்மதாவின் வயது
1) 18　　2) 19　　3) 5

(02) 01 - 5 வரையுள்ள வினாக்களுக்கு பின்வரும் சொற்களில் எழுத்துப்பிழையில்லாத சொல்லின் கீழ்க் கோடிடுக

01) 1. தொழிற்சாளை,　　2. தொலிற்சாலை,　　3. தொழிற்சாலை
02) 1. சிலம்புகள்,　　2. சிளம்புகள்,　　3. சிலம்புகல்
03) 1. விலையாட்டு,　　2. விழையாட்டு,　　3. விளையாட்டு
04) 1. புல்லாங்குலழ்,　　2. புல்லாங்குழல்,　　3. புள்ளாங்குலல்
05) 1. உல்லாசம்,　　2. உள்ளாசம்　　3. உல்லாசம்

(03) சரியான விடையின் கீழ் கோடிடுக

01) அநேக சில்லுகளைக் கொண்ட வாகனம்
1) பேருந்து　　2) புகைவண்டி　　3) லொறி

02) ஒரு வரிசையில் சிவப்பு நிற மாபிள், நீல நிற மாபிள், மஞ்சள் நிற மாபிள் என 9 மாபிள்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன இதில் 7ஆவது மாபிளின் நிறம்
1) சிவப்பு　　2) மஞ்சள்　　3) நீலம்

03) இலங்கையின் தலைநகரம்
1) கோட்டை　　2) ஸ்ரீஜெயவர்த்தன புறக்கோட்டை　　3) கொழும்பு

04) இலங்கையில் உள்ள அழகிய நீர்வீழ்ச்சி
1) துன்கிந்தை　　2) பம்பரகந்தை　　3) லக்சபான

05) மணமற்றதும் வாடாததுமான பூ
1) வாடாமல்லிகை　　2) தாளம் பூ　　3) மல்லிகை

06) கடல் கப்பல் எனின், ஆகாயம்
1) விமானம்　　2) நட்சத்திரம்　　3) பறவை

07) எளிதில் ஆவியாகக் கூடிய திரவப்பொருள்
1) மெழுகு　　2) பெற்றோல்　　3) குளிர்பானம்

08) மகுடிக்கு மயங்கும் பிராணி
1) தவளை　　2) பாம்பு　　3) மீன்

09) ஆகாயத்தோட்டி என அழைக்கப்படும் பிராணி
1) ஓணான்　　2) காகம்　　3) ஒட்டகம்

10) மின்குமிழ் எரிவதற்குத் தேவையானது
1) மின்சாரம்
2) மதுசாரம்
3) மண்ணெண்ணெய்

நேற்று பிரசுரமாகிய வினாக்களுக்கான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01. 2 | 02. 1 | 03. 3 | 04. 1 | 05. 3 | 06. 2 | 07. 2 |
| 08. 1 | 09. 1 | 10. 3 | 11. 1 | 12. 3 | 13. 2 | 14. 3 |
| 15. 1 | 16. 3 | 17. 3 | 18. 2 | 19. 2 | 20. 2 | 21. 2 |
| 22. 3 | 23. 1 | 24. 2 | 25. 3 | 26. 2 | 27. 2 | 28. 2 |
| 29. 2 | 30. 2 | 31. 3 | 32. 2 | 33. 2 | 34. 2 | 35. 2 |
| 36. 3 | 37. 3 | 38. 3 | | | | |

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 3 பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - I
1 மணி 15 நிமிடம்




# கல்வி முரசு




எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

(01) கீழே காணப்படும் ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக

1) சாதுவானது, பயன்மிக்கது





I

II

III

2) குட்டியீனும் பறவை



I

II


III

3) சூழலைப் பாதுகாப்பது, மழை பெய்ய உதவும்



I

II

III

4) நரம்புக்கருவி - இசை


I

II

III

5) பழமைமிக்கது, அரைத்தல்



I II III

6) ஒரு வியாபாரி ஒரு தேங்காய் ரூ 30.00 படி 50 தேங்காய்களை வாங்கி அதே விலையில் முழுத்தேங்காய்களையும் விற்றால் அவனுக்கு கிடைப்பது

1) அதிக அளவு லாபம் 2) அதிக அளவு நட்டம்
3) இலாபமோ, நட்டமோ இல்லை


7) கோயிலிலிருந்து பாடசாலை 1km தொலைவில் உள்ளது பாடசாலையில் இருந்து வீடு 1km தொலைவில் உள்ளது எனின் கோவிலிலிருந்து வீடு

1) 2km தூரத்தில் உள்ளது 2) 1km தூரத்தில் உள்ளது
3) கூறமுடியாது

8) உண்டியல் ஒன்றை உடைத்த போது 4 ஒரு ரூபா நாணயங்களும் 6 இரண்டு ரூபா நாணயங்களும் 3 ஐந்து ரூபா நாணயங்களும் இருந்தன உண்டியலில் காணப்பட்ட நாணயங்களின் எண்ணிக்கை

1) 30 2) 13 3) 31

9) நித்தியா எந்த நாளும் மு.ப 7.00 மணிக்கு பாடசாலைக்கு செல்வாள். நேற்று ஒரு மணித்தியாலம் பிந்திச் சென்றாள் எனின், அவள் சென்ற நேரத்தை காட்டும் சரியான உரு



I II III

10) முயலுக்கு - கொம்பு போல் உள்ள மிருகம்

1) குதிரை 2) ஆடு 3) மான்

11) நானும் எனது அம்மாவும் சந்தைக்குப் போகிறோம் என தன் தந்தையிடம் புவனா கூறுகிறாள் இச்சம்பவத்தில் எத்தனை பேர் பங்குபற்றுகின்றனர்?

1) 2 2) 3 3) 4

12) அதிகநாள் பாவிக்கக்கூடிய உணவுப்பொருள்

1) வாழைப்பழம் 2) நெத்தலி 3) தயிர்

13) உணவுக்குப்பயன்படாத பூ

1) வேப்பம் பூ 2) கொய்யாப்பூ 3) அகத்திப்பூ

14) ஆகாயத்தோட்டி என அழைக்கப்படும் பறவை

1) செண்பகம் 2) காகம் 3) மைனா

15) நூலகம் என்பதன் ஒத்தசொல்

1) நூதனசாலை 2) புத்தகசாலை 3) வாசிகசாலை

16) பாடசாலை ஒன்றின் முதல்வர்

1) அதிபர் 2) உபஅதிபர் 3) ஆசிரியர்

17) பாடசாலை ஒன்றில் அநேகமாக இருப்பவர்கள்

1) மாணவர்கள் 2) ஆசிரியர்கள் 3) சிறுமிகள்

18) முத்திரை ஒன்றை வாங்குவதற்குச் செல்ல வேண்டிய இடம்

1) வங்கி 2) சந்தை 3) தபாலகம்

19) சந்தேகத்துக்கிடமான பொதியைக் கண்டவுடன் அறிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்

1) 1119 2) 191 3) 119



20) என்சட்டம் ஒன்றில் ஒரு சட்டத்தில் இடக்கூடிய அதிகூடிய எண்களின் எண்ணிக்கை

1) 10 2) 9 3) 1

21) பாரமான பொருட்களை ஒரு இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குக் கொண்டு செல்ல உதவுவது



I II III

22) குரவி - விறகு எனின் குத்தி என்பது

1) குதித் 2) திகுத் 3) தித்கு

23) 4 x 3 = 12 எனின் 2 x 4

1) 6 2) 8 3) 2


24) கத்தி - இரும்பு எனின் கத்தரிக்கோல்

1) இரும்பு 2) றப்பர் 3) மரம்

25) செங்கமாலை என்னும் நோய் ஏற்படுவது

1) அசுத்தமான நீர் 2) வீட்டு ஈ 3) நுளம்பு

26)





? இக்குறியீட்டில் வரவேண்டியது

1) ரூ 40.00 2) ரூ 50.00 3) ரூ 60.00

27) கமலன் தனது தமிழ்ப்புத்தகத்தின் வலது பக்கம் 16ஐ படித்துக் கொண்டிருக்கின்றான் அவனது இடது கைப்பக்கத்தின் இலக்கமாக அமைவது

1) 17 2) 18 3) 15




28) மேலே காட்டப்பட்ட உருவில் உயரம் கூடியவர்

1) வதனா 2) விமலா 3) கமலா

29) 16 32 64 ? ←

இக்கூட்டில் வரவேண்டிய இலக்கம்

1) 88 2) 78 3) 128

30) பாலைவனக்கப்பல் என அழைக்கப்படும் மிருகம்

1) கழுதை 2) ஒட்டகச்சிவிங்கி 3) ஒட்டகம்

# அசம்பாவிதங்களை தவிர்க்க காலையிலேயே வாக்களியுங்கள்

## கபே வலியுறுத்து

இன்று நடைபெறுகின்ற நாடாளுமன்ற தேர்தலில் அனைத்து வாக்காளர்களும் கட்டாயமாக தமது வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் தேவையற்ற அசம்பாவிதங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு காலையிலேயே வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்கவேண்டும் என கபே அமைப்பு வேண்டியுள்ளது.

வாக்காளர்கள் தாம் விரும்பும் கட்சிக்கு வாக்களிக்கும் அதேவேளை அக்கட்சியின் ஊடாகப் போட்டியிடும் ஊழலற்ற சிறந்த வேட்பாளர்களுக்கு தமது விருப்பு வாக்குகளை வழங்குமாறு கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த தேர்தல்களோடு ஒப்பிடுகையில், இம்முறை சுயாதீனமானதும் அமைதியானதுமான தேர்தலொன்றிற்கான சூழல் காணப்படுகின்றது. தேர்தல்கள் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் போன்றன தமது செயற்பாடுகளை எவ்வித தடையும் இன்றி முன்னெடுப்பதை காணமுடிகிறது.

தேர்தல் சட்டங்களை பாதுகாக்கும் பொருட்டு மேற்கொள்ளபடும் நடவடிக்கைகளின் போது, கட்சி பேதங்களின்றி செயற்படுவதையும் காணமுடிகிறது. கடந்த காலங்களில் இவ்வாறான நிலைமைகளை காணமுடியாதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு வாக்காளர்களும் கட்டாயமாக வாக்களிக்க வேண்டும். அவ்வாறு வாக்களிக்காத பட்சத்தில் நீங்கள் விரும்பாத தகுதியற்ற நபர்கள் நாடாளுமன்றத்துக்கு பிரவேசிப்பதற்கு அது வாய்ப்பாக அமைந்துவிடும். எனவே, கட்டாயமாக அனைவரும் வாக்களிக்க வேண்டுமென அவர் மேலும் வலியுறுத்தினார்.

# வெட்டிக்கொலை

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார காரியாலயத்தை நடத்திச்சென்ற மூன்று பிள்ளைகளின் தந்தை, இனந்தெரியாத நபர்களினால் நேற்று முன்தினம் இரவு வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

என்று நெலுவ பொலிஸார் தெரிவித்தனர்.

அவருடைய சடலம், அவரது வீட்டுக்கு அண்மையில் போடப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது என்றும், கொலை செய்யப்பட்டமைக்கான காரணம் இதுவரையிலும் தெரியவில்லை என்றும் தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தனர.

# கைக்குண்டு மீட்பு

(கொழும்பு)

இம் முறை நாடாளுமன்ற தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடவுள்ள வேட்பாளர் ஒருவரின் வீட்டுக்கு முன்னால் இருந்து கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் - குருநாகல் பிரதான வீதியில் கல்கமுவ பிரதேசத்தில் அமைந்துள்ள குறித்த வேட்பாளரின் வீட்டுக்கு முன்னால் இருந்து கைக்குண்டு மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

கல்கமுவ பொலிஸினருக்கு கிடைத்த முறைப்பாட்டிற்கமைய குறித்த கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கல்கமுவ பொலிஸார் ஆரம்பிதுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்

# நெல் சந்தைப்படுத்தும் சபையினர் மத்தள விமான நிலையம் விஜயம்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவினால் அமைக்கப்பட்ட மத்தள விமான நிலையத்தில் உள்ள களஞ்சிய சாலையைப் பார்வையிடுவதற்காக கடந்த வியாழக்கிழமை நெல் சந்தைப்படுத்தும் சபையின் அதிகாரிகள் விஜயம் செய்தனர்.

மத்தள விமான நிலையத்துக்கு பயணிகள் விமானங்கள் செல்லாமை காரணமாக அந்த நிலையத்தின் களஞ்சியத்தை எதிர்வரும் பெரும்போக நெல் அறுவடையின் போது பெறப்படும் நெல்லை களஞ்சியப்படுத்த சபையின் அதிகாரிகள் ஆலோசித்து வருவதாக முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில் அங்கு சென்று பார்வையிட்ட நெல் சந்தைப்படுத்தும் சபையின் அதிகாரிகள், தற்போது குறித்த களஞ்சியத்தை பெற்றுக் கொள்வதற்காக உள்ளூர் விமான சேவைகள் நிறுவனத்திடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

# போலி விசாவை பயன்படுத்தி கட்டார் சென்றவர் கைது

(கொழும்பு)

போலி விசாவை பயன்படுத்தி கட்டார் ஊடாக இத்தாலிக்குச் செல்வதற்கு முயன்ற கடற்படையைச்சேர்ந்த 32 வயதான வீரரொருவர், அங்கிருந்து திருப்பியனுப்பப்பட்ட நிலையில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வு விசாரணை திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# விரல் அடையாள கடவுச்சீட்டு இன்று முதல் அமுல்

கடவுச்சீட்டுகளில் விரல் அடையாளத்தைப் பதிவு செய்யும் நடைமுறை இன்று முதல் நடைமுறைக்கு வரவுள்ளதாக இலங்கையின் குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

எனினும் 16 வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்கான கடவுச்சீட்டில் இந்த நடைமுறை பின்பற்றப்படமாட்டாது.

விரல் அடையாளங்கள் கணனி மயமாக்கப்பட்டு கடவுச்சீட்டுக்களில் பதியப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது

# குறுந்தகவல்கள் மூலம் 50 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் குறுந்தகவல்களினூடாக தேர்தல்கள் ஆணையாளருக்கு 50 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு மாத்திரம் 36 முறைப்பாடுகள் கிடைத்ததாக தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கின்றது.

சட்ட விரோதமாக தேர்தல் பிரசார சுவரொட்டிகள் மற்றும் கட்டவுட்கள் காட்சிப் படுத்தியுள்ளமை தொடர்பிலேயே அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே பொதுத் தேர்தல் குறித்து 1,572 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

அவ்வாறன முறைப்பாடுகளில் 322 முறைப்பாடுகள் சட்ட விரோதமாக தேர்தல் பிரசார சுவரொட்டிகள் மற்றும் கட்டவுட்கள் காட்சிப் படுத்தியுள்ளமை தொடர்பில் பதிவாகியுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் 356 முறைப்பாடுகளும், கம்பஹா மாவட்டத்தில் 105 முறைப்பாடுகளும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 72 முறைப்பாடுகளும், குருநாகல் மாவட்டத்தில் 96 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

மேலும் தேர்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் 808 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் 13 வேட்பாளர்களும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிடுகின்றது.

தேர்தல் சட்ட மீறல்களில் ஈடுபட்டவர்களை கைது செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பில் முன்னெடுகப்பட்ட விசாரணைகளின் மூலம் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களைக் கைதுசெய்வதற்கான 278 சுற்றிவளைப்புகள் இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்.

# அவுஸ்ரேலியா போன்று இலங்கையிலும் வாக்களிக்காதவர்களுக்கு தண்டனை

## அவசியம் என்கிறார் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவைப் போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளைப் போன்று எமது நாட்டிலும் வாக்களிக்காதவர்களுக்கு தண்டனை முறையொன்று கொண்டு வந்தால், வாக்களிக்காதவர்களின் வீதத்தைக் குறைக்கலாம் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். முஹமட் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் வரலாற்றில் அதிகமானோர் வாக்களித்ததாக கூறப்படும் கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் சுமார் 28 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்காது தவிர்ந்துள்ளனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 74 வீதமானோரே வாக்களித்தனர்.

அதேவேளை, கடந்த 2010 நாடாளுமன்றத் தேர்தலில் 61 வீதமானோரே வாக்களித்துள்ளனர்.

புள்ளிவிபரங்களின் அடிப்படையில், 30 அல்லது 40 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிப்பிலிருந்து தவிர்ந்து வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

# முறைப்பாடுகளைப் பதிவு செய்ய பொலிஸ் நிலையங்களில் பதிவேடு

(கொழும்பு)

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் முறைப்பாடு செய்யக் கூடிய வகையில் அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் தேர்தல் தொடர்பான தகவல் பதிவேடு ஒன்றை கையாளுமாறு தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய உத்தரவிட்டுள்ளார்.

இந்தப் பதிவேட்டை மிக கவனமாக கையாள வேண்டும்.

இந்த பதிவேட்டை பாதுகாப்பாக வைத்திருக்குமாறு தேர்தல்கள் தொடர்பான வழக்குகள் முடியும் வரை அவற்றை கவனமாக வைத் திருக்குமாறும் பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இப்பதிவோடு தொடர்பான பொறுப்பை பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் தனிப்பட்ட ரீதியில் ஏற்க வேண்டும்.

சில சமயம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இடம் மாறி செல்ல நேர்ந்தால், புதிதாக பதவியேற்கும் அதிகாரியிடம் அதனை ஒப்படைக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார்.

# இன்று நள்ளிரவுக்கு பின்னர் முதல் தேர்தல் முடிவு வெளியாகும்

நாடாளுமன்றத்துக்கு இன்று நடைபெறுகின்ற தேர்தலின் தொகுதி மட்டத்திலான முடிவுகள், இன்று நள்ளிரவுக்குப் பின்னர் வெளியிடப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். இன்று பிற்பகல் 4 மணியளவில் வாக்களிப்பு முடிவடைந்த பின்னர், தபால் வாக்குகளை எண்ணும் பணி ஆரம்பிக்கப்படும்.

வாக்களிப்பு நிலையங்களில் பதிவான வாக்குகளைக் கொண்ட வாக்குப்பெட்டிகள், வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு வந்து சேர்ந்ததும், இன்று இரவு 9 மணியளவில், வாக்குகளை எண்ணும் பணி ஆரம்பிக்கப்படும். முதலில் தேர்தல் தொகுதி ரீதியான முடிவுகள் வெளியிடப்படும். அதையடுத்து, மாவட்ட ரீதியான முடிவுகளும், இறுதியில் தேசிய அளவிலான முடிவுகளும் அறிவிக்கப்படும்.

நாளை நண்பகல் அளவில், இறுதியான தேசிய மட்ட முடிவுகள் வெளியிடப்படும். அதன் பின்னர், நாளை இரவு, விருப்பு வாக்குகளின் விபரங்கள் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோதமான முறையில் பிரித்தானியாவிற்குள் நுழையத்தடை

## - பிரதமர் டேவிட் கமரூன் அறிவிப்பு -



அத்துமீறி பிரித்தானியாவுக்குள் நுழையும் அகதிகளை இனி அனுமதிக்க முடியாது என திட்டவட்டமாக பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

அகதிகள் பிரித்தானியாவுக்குள் நுழைவதின் முக்கிய நோக்கமே பொருளாதார காரணங்களாகத்தான் இருக்க முடியும் எனவும் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்தார்.

ஆனாலும், ஐரோப்பாவிலேயே பிரித்தானியாதான் அகதிகள் மீது மிகவும் தாராளமாக நடந்துகொள்ளும் நாடுகளில் முதன்மையானதாக உள்ளது எனவும் கமரூன் குறிப்பிட்டார்.


மேலும் சட்டவிரோதமாக பிரித்தானியாவுக்குள் நுழையும் அகதிகளை கண்காணிக்கும் பொருட்டு நாட்டின் எல்லைகள் பாதுகாப்பாகவே உள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து பெருமளவு மக்கள் அகதிகளாக ஐரோப்பா நோக்கி வருவதாக குறிப்பிட்ட கமரூன், மத்திய தரைக்கடலில் அவர்கள் ஆபத்தில் சிக்கவும் நேரிடுகிறது.

எனவே, இதுபோன்ற சூழ்நிலைகளில் பிரித்தானியா சீரிய நடவடிக்கை மேற்கொண்டு அவர்களை மீட்கவும் செய்திருப்பதாக கமரூன் தெளிவுபடுத்தியுள்ளார்.

சமீபத்தில் அகதிகளுக்கு எதிராக கருத்து தெரிவித்ததாக வந்த செய்திகளுக்கு மறுப்புத் தெரிவித்த கமரூன் அதுபோன்று ஒருபோதும் தாம் பேசியதில்லை என்று கூறியது குறிப்பிடத்தக்கது.

# இளையராஜா மருத்துவமனையில்



(இந்தியா)

பிரபல இசையமைப்பாளர் இளையராஜா சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இசையமைப்பாளர் இளையராஜாவுக்கு கடந்த வெள்ளிக்கிழமை இரவு மார்பில் வலி ஏற்பட்டது.

இதையடுத்து, அவரது குடும்பத்தினர் அவரை தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர்.

மருத்துவர்கள் கூறுகையில், இருதய தீவிர சிகிச்சைப் பிரிவில் அவரை அனுமதித்து, மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்பட்டு, தற்போது அவர் நலமாக உள்ளதாக தெரிவித்தனர்.

மேலும், இளையராஜாவுக்கு இருதய சிகிச்சை தேவையா என்பது குறித்து ஓரிரு நாட்களில் முடிவு செய்யப்படும் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர

# சீனாவில் வெடி விபத்து

(சீனா)


சீனாவின் துறைமுக நகரங்களில் ஒன்றான தியான்ஜினில் உள்ள ருய்ஹாய் பண்டகசாலையில் இரசாயனங்கள், எளிதில் தீப்பற்றும் பொருட்கள் வைக்கப்பட்டிருந்த கண்டெய்னர்களில் கடந்த 12ஆம் திகதி இரவு 11.20 மணிக்கு இரு வெடி விபத்துகள் நேரிட்டன. அந்தப் பகுதியை உலுக்கிய இந்த வெடி விபத்துகளில் 50 பேர் உயிரிழந்ததாகவும், 500இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்ததாகவும் முதற்கட்ட தகவல்கள் கூறின.

இந்த வெடி விபத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை நேற்று 110ஐ தாண்டியது. இவர்களில் தீயணைக்கும் படை வீரர்கள் 21 பேரும் அடங்குவர். 90இற்கும் மேற்பட்டவர்களைக் காணவில்லை. 721 பேர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 25இற்கு மேற்பட்டோரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. சம்பவம் நடந்து 6 நாட்கள் ஆகியும் இன்னும் அதன பேரழிவில் இருந்து அந்த நகரம் மீளவில்லை.சுமார் 1 கோடி மக்கள் வசிக்கிற அந்த நகரத்தில், தொடர்ந்து சிறு வெடி விபத்துக்களாலும், தீயினாலும் பதற்றம் தொடர்கிறது. 6 ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்டோர் இடம் பெயர்ந்துள்ளனர். வெடி விபத்துகள் தொடர்பான வதந்திகளை பரப்புவதாகக்கூறி 300 இற்கும் மேற்பட்ட சமூக ஊடக கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.

சம்பவப் பகுதியில் 200 இற்கும் மேற்பட்ட இராணுவ அணு மற்றும் உயிரி இரசாயன வல்லுனர்கள் ஆய்வுப் பணிக்காக விரைந்துள்ளனர். அவர்கள் அங்கு ஆய்வு நடத்துகின்றனர். வெடி விபத்து நடந்த பகுதியில் இருந்து 3 கி.மீ. சுற்றளவில் வசித்து வருகிற மக்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேறுமாறு சீன அரசு உத்தரவிட்டது. ஏராளமான மக்கள் அங்குள்ள பள்ளிக்கூடம் ஒன்றில் தஞ்சம் புகுந்துள்ளனர். அனைவரும் முகமூடி அணிந்து திரிகின்றனர்.

நச்சுக்காற்றை சுவாசித்தால், உட்கொண்டால் மரணம் ஏற்படும். ஏனெனில் இது ஒக்சிஜன் செயறபாட்டை முடக்கி விடும் இது போன்ற இரசாயனங்களின் ஆபத்து, தொடர்ந்து வெளிவரும் புகை, உயிராபத்து ஏற்படுத்தும் அச்சுறுத்தல்கள் காரணமாக சம்பவ இடத்தில் இருந்து 3 கி.மீ. சுற்றளவில் வசிக்கிற மக்கள் வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. ஆனால், இதனை அதிகாரிகள் உறுதிப்படுத்தவில்லை.

# கப்பலில் தீ விபத்து பிலிப்பைன்ஸில் சம்பவம்



(பிலிப்பைன்ஸ்)

பிலிப்பைன்ஸ் நாட்டின் துறைமுகத்துக்கு 544 பேருடன் வந்தகப்பலில் திடீரென தீப்பற்றியதால் பரபரப்பு ஏற்பட்டது.

பிலிப்பைன்ஸ் நாட்டின் ஓர்மோக் நகரில் உள்ள துறைமுகத்துக்கு வொண்டர் புல் ஸ்டார என்ற இரண்டடுக்கு கப்பல் 544 பயணிகளுடன் வந்து சேர்ந்தது.

இந்நிலையில் அந்த கப்பலில் திடீரென தீப்பற்றியதால் பரபரப்பு ஏற்பட்டது. கப்பலின் விஐபிகள் பகுதியில் இருந்த 6 பேரில் 5 பேர் ஜன்னல் வழியாக கீழிறங்கித் தப்பினர்.

எனினும் கப்பலின் மேல் பகுதியில் மாட்டிக்கொண்ட பயணி ஒருவர் 30 அடி உயரத்தில் இருந்து கடலில் குதித்து உயிர் தப்பினர்.

கப்பலில் இருந்த குழந்தைகள் உட்பட பயணிகளை மீட்புப் படையினர் பத்திரமாக மீட்டனர்.

இதில் மீட்புப்படையைச் சேர்ந்த 2 வீரர்களுக்கு மட்டும் சிறிய காயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# மன நோயாளியால் புதிய மாற்றம்



இந்தியாவின் தமிழ்நாட்டின் திண்டுக்கல் அருகே வத்தலகுண்டு பேருந்து நிலையத்தில் பயணிகள் கண்ட இடங்களில் தூக்கி வீசும் குப்பைகளை மன நல நோயாளி ஒருவர் ஓடோடிச் சென்று எடுத்து குப்பை தொட்டியில் கொண்டு போடுகிறார். அவரைப் பார்த்து பயணிகளும் குப்பையை கீழே போடத் தயங்குவதால் வத்தல குண்டு பஸ் நிலையம் இப்போது சுத்தமாக காணப்படுகிறது.

வத்தலகுண்டு பேருந்து நிலையத்தில் குவியும் குப்பைகளை வத்தலகுண்டு பேரூராட்சி துப்புரவுத் தொழிலாளர்கள் தினமும் காலையில் மட்டும் அகற்றுவர். மற்ற நேரங்களில் குப்பைகள் குவிந்து காணப்படும்

இந்நிலையில் கடந்த 2 மாதங்களாக வத்தலகுண்டு பேருந்து நிலையம் குப்பை இன்றி சுத்தமாகக் காணப்படுகிறது. இதன் பின்னணியில் ஒரு மன நோயாளி உள்ளார். காலை முதல இரவு வரை பேரூராட்சி குப்பை வண்டியுடன் பேருந்து நிலைய வளாகத்தில் சுற்றித் திரியும் இந்த மனநோயாளி பயணிகள் வீசும் குப்பைகளை ஓடிச்சென்று எடுத்து குப்பைத் தொட்டியில் கொண்டு போடுகிறார்.

இது தொடர்பாக அவரது தம்பியிடம் விசாரித்தபோது, ஒரு நாள் ரெங்கராஜன் அவரது தந்தையை அடித்துவிட்டாராம். மகன் அடித்து விட்டானே என மன முடைந்தே தந்தை இறந்து விட்டாராம்.

அவரது இறப்புக்கு தான் காரணமாகிவிட்டேனே என்ற கவலையில் இவர் மனநோயாளியாகிவிட்டார். இன்று அவரால் எங்கள் ஊர் பேருந்து நிலையம் சுத்தமாகியிருப்பது மகிழ்ச்சியாக உள்ளது என்றார்.

# கொட்டாவி விடாதவர்கள் மன நோயாளிகள்

## - விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு -

மன நோயாளிகளின் பண்புகள் கொண்டவர்கள் தொடர் கொட்டாவி விடுவதில்லை என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அமெரிக்காவின் பைலர் பல்கலைக்கழகத்தில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் சிலர் இது தொடர்பான தங்களது கண்டுபிடிப்புகளை சமீபத்தில் வெளியிட்டனர்.

இதில் மன நோயாளிகள், கொடூர சிந்தனைகளுக்கு ஆட்பட்டவர்கள் ஆகியோர் பெரும்பாலும் கொட்டாவி விடுவதில்லை என கண்டறிந்துள்ளனர்.

# இந்தோனேசிய விமானம் மாயம்

இந்தோனேசியாவில் 54 பயணிகளுடன் சென்ற விமானம் நேற்று திடீரென தரைக்கட்டுப்பாட்டு மையத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. பப்புவா மாகாணத்தின் வான்பகுதியில் சென்றபோது விமானம் காணாமற் போனதை தேசிய மீட்புக்குழு உறுதி செய்ததாக ராய்ட்டரில் செய்தி வெளியாகி உள்ளது. விமானத்தின் சிக்னலுக்காக காத்திருக்கும் அதேசமயம், அதனைத் தேடும் பணியையும் அதிகாரிகள் தொடங்கி உள்ளனர்.

டிரைகானா விமான நிறுவனத்திற்கு சொந்தமான அந்த பயணிகள் விமானம், ஜெயபுராவின் செண்டானி விமான நிலையத்திற்கும் ஆக்சிபில் பகுதிக்கும் இடையே பறந்தபோது தொடர்பு துண்டிக்கப்பட்டதாகத் தகவல் வெளியாகி உள்ளது. எனவே, அப்பகுதிக்கு மீட்புக்குழு விரைகிறது.

விமானத்தில் 44 பயணிகள், 5 குழந்தைகள் மற்றும் 5 ஊழியர்கள் இருந்ததாக தேசிய மீட்புக்குழு டுவிட்டரில் தெரிவித்துள்ளது.

## சரஸ்வதியின்...

கோரிக்கைக்கமையவே இந்த உருமறைப்பு செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. கட்சியொன்றின் சின்னம் வீணை என்பதாலேயே அருகிலுள்ள வீடுகளுக்குச் சென்ற கண்காணிப்பாளர்கள் வேட்டி ஒன்றை வாங்கிவந்து சிலையை உருமறைப்புச் செய்துள்ளனர்.

கண்காணிப்பாளர்களின் உருமறைப்பு செயற்பாடு குறித்து மக்கள் தமது விசனத்தை தெரிவித்துள்ளனர். குறிப்பாக வீணையை உருமறைப்பு செய்யம் இவர்கள் பாடசாலைக்கு முன்னால் இருக்கும் வீடு, மக்கள் பயன்படுத்தும் சைக்கிள் என்பவற்றையும் உருமறைப்புச் செய்வார்களா எனவும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

## சரிந்த...

வெடிகுண்டுத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டதனை எடுத்துக் கொள்ளமுடியுமென அவர்கள் தெரிவிக்கின்றனர். இந்தச்சம்பவம் இடம்பெற்று சிறிது நேரத்தின் பின்னர் கூட்டமைப்பின் மற்றொரு வேட்பாளரான சிறிகாந்தாவின் வீட்டு வாசலிலும் இந்த நாட்டு வெடிகுண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் அறிவிக்கப்பட்டு பிரசாரப் பணிகள் தொடங்கி அது முடியும் வரை யாழ்ப்பாணத்தில் தேர்தல் வன்முறைகள் எதுவும் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் எதுவும் இடம்பெறவில்லை. ஆனால் பிரசாரங்கள் ஓய்ந்த நிலையில் இந்த நாட்டு வெடிகுண்டுத் தாக்குதல்கள் நிகழ்ந்தமையானது கூட்டம்மைப்பின் உள் வீட்டு வேலையாக இருக்கலாமென தாம் சந்தேகிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட நாட்டு வெடிகுண்டு குருநகரிலுள்ள ஒருவரிடமிருந்தே கூட்டமைப்பினர் பெற்றுள்ளதாகவும் தெரியவருகிறது. குறித்த நபர் நாட்டு வெடிகுண்டைப பயன்படுத்தி மீன் பிடித்து நீதிமன்றில் தண்டனை பெற்றவர் எனவும் தெரியவருகிறது.

குறித்த நபரிடமிருந்து நாட்டுவெடிகுண்டைப் பெறுவதற்காக அவருக்கு ஒருதொகைப் பணமும் கூட்டமைப்பினரால் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனிடையே இந்தச் சம்பவம் தொடர் பாக கூட்டமைப்பினர் தமது வழமையான கண்டனத்தையோ அல்லது பொலிஸ் முறைப்பாட்டையே செய்யவில்லை எனவும் தெரியவருகிறது. இந்தச் சம்பவம் குறித்து மக்கள் எவரும் அச்சமடையத் தேவையில்லை என கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

எனவே இம்முறை தேர்தலில் தமது செல்வாக்கு சரிந்துள்ளதை புரிந்துகொண்ட கூட்டமைப்பினர் வன்முறை வழிகளைக் கையாண்டு தம்மை ஏமாற்றி வாக்குகளை அபகரிக்க முயற்சிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தமிழ்த்தேசியம் பேசும் ஊடகங்களும் இந்தச் சம்பவங்களை கண்டுகொள்ளாமல் விட்டது ஏனோ எனவும் அவர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

### பிரகீத் கடத்தல் விவகாரம்

# விசாரணை முடிவடையும் வரை தகவல்கள் வெளிவராது

ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல் போன சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் நிறைவடையும் வரை, அதன் தகவல்களை முழுமையாக வெளிப்படுத்த முடியாது என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தகவல்கள் வெளியிடப்படின் சாட்சிகள் பாதிக்கப்படலாம் என, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

வெற்றிகரமான விசாரணைகளை மேற்கொண்டு சந்தேக நபர்களை நீதிமன்றத்தின் முன் நிரூபிப்பது அவசியம் என சுட்டிக்காட்டிய அவர், அதற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் எதனையும் செய்ய முடியாது எனவும் கூறியுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பான தகவல்களை வெளியிடுமாறு அண்மையில் எக்னலிகொடவின் மனைவியான சந்தியா எக்னலிகொட கோரிக்கை விடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எதுஎவ்வாறு இருப்பினும் எக்னலிகொட காணாமல் போன சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் வெற்றிகரமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பில் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி மற்றும் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கூட்டமைப்பின்...

அட்டைகளை நேற்றைய தினம் அச்சடித்து எடுத்துச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல அச்சகமொன்றிலேயே இதனை அவர்கள் அச்சடித்துள்ளனர். இதில் ஒருவர் ஒரு இலட்சமும், மற்றையவர் 50 ஆயிரமும் அச்சடித்துள்ளனர்.

✦ ✦ ✦

கூட்டமைப்பின் வேட்பாளரான ஏம்.ஏ.சுமந்திரன் தனது தேர்தல் பரப்புரைக்காக பொய்யான வகையில் புலம் பெயர்ந்தவர்களை பயன்படுத்தியமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இதனை அவர்களே தெரிவித்துள்ளனர்.

பொய்ப்பிரசாரம் மேற்கொள்ளும் சுமந்திரனா தமிழருக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கப்போகிறார் என மக்கள் கேட்கின்றனர்.

## மின்சாரம் தாக்கி இறந்த மகன் வாய் பேச முடியாத தாய், தந்தையர்

### – மூன்று நாட்களாக மீட்கப்படாத சடலம்

மின்சாரம் தாக்கி உயிரிழந்த நிலையில் சிறைச்சாலை உத்தியோகத்தர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.யாழ். திருநெல்வேலி தெற்கு பகுதியைச் சேர்ந்த கலைச்செல்வன் (வயது - 32) என்பவரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு தனது வீட்டில் மின்சார வேலை செய்துகொண்டிருந்துள்ளார். அந்த வேலையின் போது மின்சாரம் தாக்கி உயிரிழந்து கிடந்துள்ளார்.

வீட்டில் தாய் மற்றும் தந்தை வாய் பேச முடியாதவர்கள் மகன் இறந்து கிடந்ததை கூட அறிந்திருக்காமல் இருந்த போது நேற்று ஞாயிற்றுக்கிழமை சடலத்தில் இருந்து துர்நாற்றம் வீசியுள்ளது. அதன்போது, பெற்றோர்கள் மகன் இறந்து கிடந்ததை கண்டுள்ளனர். சம்பவ இடத்திற்கு கோப்பாய் பொலிஸார் சென்று பார்வையிட்டதுடன், சடலத்தினை யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளனர்.

## மதிலுடன்...

மடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறை ஆதி கோயிலடியைச் சேர்ந்த சி.சிவகுமார் (வயது - 27), மானிப்பாய் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இ.ரவீந்திரன் (வயது - 57) ஆகியோரே இந்த விபத்தில் மரணமடைந்துள்ளனர்.

இந்த வாகன விபத்தை அடுத்து அதில் பயணித்த ஐவர் மிகவும் ஆபத்தான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கம்பர் மலையைச் சேர்ந்த செல்வேந்திரன் (வயது - 27), மானிப்பாய் வீதி 3 ஆம் கட்டையைச் சேர்ந்த விஜயமாலா (வயது - 61), சுகிர்தரஞ்சன் (வயது - 57), கௌதமன் (வயது - 26), சிறீஸ்கந்தவேள் (வயது - 67), ஆகியோரே காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருமண நிகழ்வொன்றுக்காக சுவிஸிலிருந்தும், லண்டனிலிருந்தும் வந்தவர்களின் வாகனமே இந்த விபத்தில் சிக்கியிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ,11)

## சுதந்திர...

மலையிலிருந்து வந்த சம்பந்தன மே தின நிகழ்வில் சிங்கக் கொடியை தனதுகையில் ஏந்திப் பிடிக்கிறார்.

அத்துடன் ஆட்சியாளருக்கு ஆதரவு எனத் தெரிவிக்கும் சம்பந்தன் தமிழருக்கான தீர்வாக எதனை வழங்குவீர்கள் என ஒருவார்த்தை கேட்டதுமில்லை.

அண்மையில் கொழும்பில் தந்தை செல்வாவின் பிறந்த நாளை கொண்டாடிய வேளை அதற்கு பிரதம விருந்தினராக சந்திரிக்காவை அழைத்தீர்கள், நாளை இறுதிப் போரில் உயிரிழந்த இசைப்பிரியாவின் நினைவுதின நிகழ்விற்கு மகிந்த ராஜபக்ஷவை இவர்கள் அழைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இறுதிக்கட்டம் போரில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையே தேவை என தமிழ் மக்கள் கோரிவருகின்ற வேளை, வெளிநாட்டில் அமைச்சர் மங்கள சமரவீரவுடன் ஒரேசேர அமர்ந்திருந்து சுமந்திரன் சொல்கிறார் சர்வதேச விசாரணை தேவையில்லை உள்ளக விசாரணை போதும என்கிறார்.

அத்துடன் தமிழர் தொடர்பான முடிவுகளை கூட்டமைப்பினர் சுயமாகவே எடுக்கின்றனர். தமிழரின் விடிவுக்காக போராடிய போராளிகளுடன் பேசாமல் உண்மையான போராளிகள் இறந்துவிட்டார்கள் எனக்கூறி அவர்களின் தியாகத்தையும் கூட்டமைப்பினர் கொச்சைப் படுத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மாவை...

போது இவருக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் படிகளின் அடிப்படையில் இவர் சாதாரண ஒரு அரச உயர் அதிகாரியின் சம்பளம் மற்றும் படிகளே பெறுவார்.

ஆனால் இவருக்கு இந்தியாவில் தமிழ்நாட்டின் மிகவும் செல்வாக்குள்ள பெறுமதியான இடத்தில் இவ்வளவு பெரிய மாளிகையை இந்த சம்பளத்தில் இருந்து பெற்றுக் கொள்ள முடியுமா? இவரது சம்பளத்தின் ஊடக இவரது மனைவிக்கு (பெரியவீட்டு மனைவி) பிறந்த பிள்ளைகள் இவ்வாறு சொகுசான முறையில் திரியமுடியுமா?

இவரது பிள்ளைகள் எந்த வேலைகளும் செய்வதில்லை. தம்பி நீர் என்ன வேலை செய்கின்றீர் என யாராவது கேட்டால் எங்ட அப்பா இலங்கையில் மிகவும் பிரபலமான நாடாளுமன்ற உறுப்பினர் என்று மட்டும் தெரிவித்துவிட்டு உலகைச் சுற்றி வருகின்றாராம்.

இவ்வளவு சொகுசு வாழ்க்கை எவ்வாறு மாவை.சேனாதிராஜா உட்பட்டவர்களுக்கு வந்துள்ளது. யாரால் இது கிடைத்துள்ளது. தமிழ்மக்களாகிய உங்களை வைத்து விபசாரம் செய்து உங்கள் வாக்கு என்னும் கற்பைக் கொள்ளையடித்து அரசாங்கத்திற்குக் கூட்டிக் கொடுத்து வாழும் இவ்வாறான கேவலம் கெட்ட கூட்டமைப்பு உறுப்பினர்களைக் கழித்து வைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

இதனை நீங்கள் கருதாது செயற்பட்டால் இன்னும் 5 வருடங்களுக்கு நீங்கள் சின்ன வீடுகளாக இருந்து கண்ட கண்ட பரதேசிகளும் ஏறி மிதித்துவிட்டுச் செல்ல இடம் கொடுத்தவர்களாக இருப்பீர்கள் என்பதை உணர்ந்து செயற்படுங்கள்.

## சம்பந்தர்...

கோரிக்கைகள் எவற்றை கூட்டமைப்பு முன் வைக்கும் என்பதை சம்பந்தர் தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்தவில்லை.

தமிழ் மக்கள் ஈடற்ற இழப்புக்களையும், துயரங்களையும் எதிர்கொண்டு போராடி வந்துள்ள உரிமைப் பிரச்சினைக்கான தீர்வை தீர்மானிக்கும் பொறுப்பை சம்பந்தரிடமும், சுமந்திரனிடமும் ஒப்படைத்திருப்பதைப்போல் அவர்கள் நினைத்துக் கொண்டு, தமது விருப்பப்படி தீர்மானங்களை எடுத்துச் செயல்படுகின்றனர் என்றும் நோக்கர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தமிழ் மக்கள் இம்முறை தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருபது நாடாளுமன்ற உறுப்பினர்களை வெற்றி பெறச் செய்தால் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை அடுத்த ஆண்டு ஜூன் மாதத்துக்குள் பெற்றுக் கொடுப்போம் என்று கூறியிருந்ததை, சாத்தியமற்ற பொய் வாக்குறுதி என்று ஏற்கனவே தமிழ் மக்கள் நிராகரித்து விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிக்கு ஆதரவு என இறுதி நேரத்தில் தெரிவித்தார். ஆனால் தமிழரின் நலன் சார்ந்து அவருடன் எவ்வித பேரம் பேசுதலையும் அவர் நடாத்தவில்லை. மாறாக ஆதரவு என மட்டும் தெரிவித்தார்.

ஜனாதிபதியாக மைத்திரி தெரிவானதும் அவர் அமைத்த தேசிய பேரவையில் முக்கிய உறுப்பினராக இருந்தார். ஆனால் தமிழ் மக்களின் நலன் குறித்து எதுவும் பேசவில்லை.

தற்போது தேர்தல் வந்தவுடன் சமஷ்டி என்றும், சுயாட்சி எனவும் தமிழ் மக்களை ஏமாற்ற தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட்டுள்ளார். ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தீர்வென கூறி வந்த சம்பந்தன் திடீரென சமஷ்டி, சுயாட்சி என தேர்தல் நேரத்தில் கூறுவதன் கபட நோக்கம் தமிழரிடம் வாக்குகளை அபகரிக்கவே என புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

தமிழ் மக்களை கேட்காமல் சிங்கக்கொடி பிடிக்கத்தடையில்லை, சிங்கள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிரிக்கெட் ஆடத்தடையில்லை. அரச தலைவர்கள் அழைத்தபோதெல்லாம் தனியாகவும், கூட்டாகவும் சென்று சந்திக்கத் தடையில்லை. பின்னர் அறிக்கை மட்டும் தமிழ் மக்களின் நலனுக்காக இராஜதந்திர சந்திப்பு என வாய் கூசாமல் கூற தடையில்லை. வீதி திருத்த, வேறு தேவைக்கென அரசிடம் இரகசியமாகச் சென்று காசு கேட்கத்தடையில்லை.

மாறாக இந்த தடை எல்லாவற்றையும் செய்வதற்கு தமிழ் மக்கள் முன் அரசை வீராவேசமாக எதிர்த்து வாக்குக் கேட்கவும் இவர்களுக்கு தடையில்லை எனவும் புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

# அந்த முன்னாள் எம்.பி.யின் ஐஸ்கிறீம் அரசியல்

## பாதிக்கப்பட்ட தொழிலாளி வேதனை

வடக்கு மாகாண சபையை பொறுப்பேற்றவர்கள் வட மாகாணத்தில் செய்யவேண்டிய எவ்வளவோ பணிகள் இருக்கையில், கைத்தொழிலாக ஐஸ் கிறீம் தயாரித்து அன்றாடம் சீவியம் நடத்திய எங்கள் வாழ்க்கையில் மண்ணை அள்ளிப் போட்டதை எங்களால் மறக்க முடியவில்லை என்று பாதிக்கப்பட்ட தொழிலாளியான சதீஸ்கரன் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்து குடிநீர் மாசடைந்து வருகின்றது, யாழ்ப்பாணத்தின் சிற்றுண்டிச் சாலைகளின் சுகாதாரம் முறையாக பரிசோதனை செய்யப்படாமல் நோய்க்காவிகளாக உள்ளன. இவற்றுக் கெல்லாம் அக்கறை கொண்டு நடவடிக்கை எடுக்காமல் ஐஸ் கிறீம் தொழிலகங்களை குறிவைத்து முடக்கியதை மறக்க முடியாது.

ஐஸ்கிறீம் தயாரிப்பதில் உபயோகப்படுத்தப்படும் நீரில் மலத் தொற்று இருப்பதாகக் கூறி, அரசியல் மற்றும் சுயநல வியாபார நோக்கங்களுக்காக வட மாகாண சபையினரும், சுகா தாரப் பரிசோதகர்களும், எம்மை துன்புறுத்தியபோது அதைக் கண்டு கொள்ளாமல் இருந்த அரசியல்வாதிகள் இப்போது எம்மிடம் வாக்குக் கேட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் பத்திரிகை நடத்தும் ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், கொழும்பிலிருந்து தயாரிக்கப்படும் ஐஸ்கிறீம் நிறுவனத்தின் வட மாகாணத்துக்கான விற்பனை உரிமையை வாங்கிக் கொண்டு, திட்டமிட்டு யாழ்ப்பாணத்தில் தயாராகும் ஐஸ் கிறீம்களில் மனித மலத் தொற்று கலந்திருப்பதாக ஒரு பிரச்சினையை முன்னெடுத்ததை மறந்துவிட்டு வர்க்களிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 1950 ஆம் ஆண்டுகளில் இருந்து ஐஸ் கிறீம் தயாரிக்கும் தொழில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவருகின்றது. அதை எமது பிள்ளைகளும் உண்கிறார்கள் ஆனால் ஐஸ் கிறீம் உண்டதால் யாருக்கும் நெருப்புக் காய்ச்சலோ, வாந்தி பேதியோ, வேறு நோய்களோ ஏற்பட்டதாக இதுவரை யாழ்ப்பாணம் மருத்துவமனையில் எந்தவொரு நபருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டதாக நாங்கள் அறிந்ததில்லை.

ஆனால் அரசியல் நோக்கத்தோடு, எமது தொழில் முடக்கப்பட்டபோது, யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற 59 ஐஸ் கிறீம் தொழில்கங்களும் பாதிக்கப்பட்டன. அந்தத் தொழிலை நம்பியிருந்த சுமார் 2500 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டார்கள். அவர்களை சார்ந்திருந்த குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 15000 பேர் நேரடியாக பாதிக்கப்பட்டிருந்தனர்.

இத்தனை பாதிப்புக்களுக்கும் காரணமாக இருந்தவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ்ப்பாணத்தில் பத்திரிகை நடத்துகின்றவருமா வார் என்பது யாவருக்கும் தெரிந்த விடயமாகும்.

அதைக் கண்டிக்காமலும், எமக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்காமலும் இருந்தவர்களுக்கு நாம் சரியான தீர்ப்பை வழங்குவோம் என்றும் சதீஸ்கரன் தெரிவித்தார்.

# காலை வேளையிலேயே வாக்களிக்கச் செல்லுங்கள்

## தேர்தல்கள் ஆணையாளர் அறிவுறுத்து



பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் இன்று காலை 7 மணி முதல் ஆரம்பமாகவுள்ளன.

இயன்றளவு காலை வேளையிலே சென்று வாக்களிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய வாக்காளர் களிடம் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

சட்டன அரசியல் விவாத நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

வாக்களிப்பிற்கான அனைத்து நடவடிக்கைகளும் தயார்படுத்தப்பட்டுள்ளன. வாக்களிப்பது நமது உரிமை எனவும் மக்கள் தமது அதிகாரத்தை அச்சமின்றி சந்தேகமின்றி பயன்படுத்த வேண்டும்.

காலை வேளையி லேயே வாக்களிக்கவும், பிற்பகல் சென்று வாக்களிப்போம் என்று எண்ண வேண்டாம் எனவும் வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் பிரச்சினைகள் ஏற்படும் இடங்கள் தொடர்பில் ஆராயாது வாக்களித்த பின்னர் உங்களின் தொழில் தலங்களுக்கு, வீடுகளுக்கு செல்லுங்கள் என்றும் இதன் போது தேர்தல்கள் ஆணையாளர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வாக்காளர்கள் யாருக்கு வாக்களித்தார்கள் என்பதை யாரும் கண்டுபிடித்துக் கொள்ள முடியாது. வாக்காளர்கள் யாருக்கு வாக்களித்தது என்பதை வெளிக் காட்டவும் தேவையில்லை. எனவே, எந்தப் பயமும் இன்றி தங்களது வாக்குப் பலத்தை பயன்படுத்துங்கள்.

அளிக்கும் வாக்குகளை கவனமாக பாதுகாத்து எண்ணுவதற்கான ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளதாகவும் தேர்தல்கள ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார

# தேர்தல் முறைப்பாடுகள் தெரிவிப்பதற்கு வசதி

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருக்கு அல்லது தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் மற்றும் கண்காணிப்புகள் குறித்து விசாரணை மேற்கொள்ளும் நிலையங்கள் இன்று காலை 6.30 மணிக்கு திறக்கப்படவுள்ளன.

இந்த நிலையங்களில் முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கான தொலைபேசி இலக்கங்களும் தேர்தல்கள் செயலகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் கொழும்பு மாவட்டத்தில் 0112 879 049, 0112 879 050 ஆகிய இலக்கங்க ளுக்கும், கம்பஹா, களுத்துறை மாவட்டங்களில் 0112 879 051, 0112 879 053ஆகிய இலக்கங்களுக்கும் கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் 0112 879 054, .0112 879 056 ஆகிய இலக்கங்களிற்கும் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும்.

காலி. மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களின் முறைப்பாடுகளை தெரிவிப்பதற்காக 0112 879 057, 0112 879 058 ஆகிய இலக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்க ளுக்காக 0112 879 059, 0112 879 060 ஆகிய இலக்கங்களும் மட்டக்களப்பு, திகாமடுல்ல, திருகோணமலை மாவட்டங்களுக்காக 0112 879 062, 0112 879 063 ஆகிய இலக்கங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

# 54 பேருடன் சென்ற இந்தோனேஷிய விமானம் மலையில் மோதி விபத்து



விமானம் விழுந்ததாக கூறப்படும் மலை

இந்தோனேஷியாவில் 54 பேருடன் சென்ற விமானம் திடீரென மாயமானதை அடுத்து அந்த விமானத்தை தேடும் பணி மிகத் தீவிரமாக நடந்து வந்தது. இந்நிலையில், இந்த விமானம் மலையின் மீது மோதி விபத்துக்குள்ளானது என்றும் அதன் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் இந்தோனேஷியப் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியாவின் ஜெயபுரா நகரில் உள்ள சென்தானி விமான நிலையத்தில் இருந்து பப்புவா மாகாணத்தில் உள்ள ஒக்சிபில் நகருக்கு நேற்று ஒரு விமான்ம் புறப்பட்டு சென்றது. திரிகானா விமான சேவை நிறுவனத்துக்கு சொந்தமான ஏ.டி.ஆர். 42–300 ரகத்தை சேர்ந்த அந்த விமானத்தில் 5 குழந்தைகள் உட்பட 49 பயணிகள் மற்றும் 5 ஊழியர்கள் என மொத்தம் 54 பேர் பயணம் செய்தனர்.

பப்புவா பிராந்தியத்தில் அடர்ந்த வனப்பகுதிக்கு மேலே அந்த விமானம் பறந்து கொண்டிருந்த போது, அதனுடன் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. விமானம் திடீரென்று மாயமானது. இதைத்தொடர்ந்து, இந்தோனேஷிய தேடுதல் மற்றும் மீட்புக்குழுவினர், காணாமற் போன விமானத்தை தேடி கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தனர்.

இந்நிலையில், இந்த விமானம் இந்தோனேஷியாவின் பப்புவாவில் ஒக்பேப் என்ற மாவட்டத்தில் உள்ள மலையில் மோதி விழுந்ததாகவும் அதன் பாகங்களைக் கண்டெடுத்துள்ளதாகவும், அந்நாட்டு விமான போக்குவரத்து அமைச்சர் சுப்ர செத்யோ தெரிவித்துள்ளார்.

கண்டுபிடிக்கப்பட்ட பாகங்களை அதிகாரிகள் பரிசோதித்து வருகின்றனர். ஆனால் விமானத்தில் பயணம் செய்த யாரும் உயிர் பிழைத்தார்களா என்பது குறித்து இதுவரை எந்த தகவலும் இல்லை.

# சாராய அரசியலில் கூட்டமைப்பினர்

ஒரு மனிதன் வயதுக்கு வந்துவிட்டான் என்று கூறுவதில் இரு அர்த்தங்கள் உள்ளன. ஒன்று அவன் திருமணம் செய்ய முடியும். இன்னொன்று அவன் தேர்தலில் வாக்குப் போட்டு அரசியல் உரிமையை நிலைநாட்ட முடியும்.

ஒருவனது வாக்குப் போடும் உரிமை அவன் திருமணம் செய்து தனது மனைவி அனுபவிக்கும் உரிமைக்கு ஒப்பானது.

இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் சாராயத்திற்காக தங்களது வாக்குகளை விற்கும் குடிமக்கள் ஏராளமானவர்கள் இருக்கின் றார்கள். அதே போல் யாழ்ப்பாணத்திலும் இருப்பார்கள் என்ற நம்பிக்கையில் கூட்டமைப்பினர் உள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் சிலர் சாராயப் போத்தல்களை கொள்வனவு செய்துள்ளதாக அவர்களது பிரசாரக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.

ஒவ்வொரு வேட்பாளர்களும் 2500 சாராயப் போத்தல்களையும் இவை அனைத்தும் சிறிய போத்தல் சாராயம் எனவும் இவற்றை வடமராட்சி கிழக்கு, வடமராட்சி, கிளிநொச்சி, பளை ஆகியபகுதிகளில் இவர்களுக்கு ஆதரவாக வேலை செய்பவர்களிடம் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தினத்தன்று மட்டும் இவற்றை விநியோகித்து, வேட்பாளரின் இலக்கத்தையும் கூறி இவரிற்கு வாக்குகளை போடுமாறு வாக்கா ளர்கள் கோரப்படவுள்ளனர. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இம்முறை சாராயப் போத்தல்களுடனும் அரசியல் செய்யத் தொடங்கியுள்ள்னர்.

# ஊழல்களின் சொர்க்கபுரியாக மருதனார்மடம் கடைத்தொகுதி

(மருதனார்மடம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆட்சியிலிருந்த வலி.தெற்கு பிரதேச சபையினால் மருதனார்மடம் சந்தைப் பகுதியில் பொதுமக்களின் வரிப்பணத்தில் கட்டப்பட்ட புதிய கடைத்தொகுதியில் பல்வேறு ஊழல்கள் தலைவிரித்தாடுவதாக பலர் விசனம் தெரிவிக்கின்றனர்.

கட்டடம் கட்டுவதற்கான ஒப்பந்தத்தினை அதிகூடிய தொகைக்கு வழங்கி அதிலிருந்து பண மோசடி செய்யப்பட்டது. அம்மோசடியை மீண்டும் கடை கொள்வனவு செய்பவர்களின் தலைச்சுமையாக ஏற்றப்பட்டுள்ளது.

பல வருடங்களாக பழைய கடைத்தொகுதியில் கடை நடத்தியவர்களுக்கு புதிய கடைத்தொகுதியினை முன்பகுதி 18 இலட்சத்திற்கும், பின் கடைத்தொகுதி 12 இலட்சத்திற்கும் வழங்கப்படுகிறது. பொதுமக்களின் கருத்துப்படி அக் கடைத்தொகுதி கட்டுவதற்கு மேற்குறிப்பிட்ட தொகைகளின் அரைவாசியே முடிந்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மிகுதி புதிய கடைகளை 18 இலட்சம் முதல் 12 இலட்சம் வரை கூறுவிலை உச்ச விலைக்கு விற்கப்படுகிறது. அதாவது 18 இலட்சம் ரூபா கடை 28, 30 இலட்சம் வரையிலும், 12 இலட்சம் ரூபா கடை 20, 25 இலட்சம் வரையிலும் கோரப்படுவதாக அறியப்படுகிறது.

அரச. மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிக்கப்பட்ட பெறுமதியிலும் மிகவும் கூடுதலாகவுள்ளது. மேற்குறிப்பிட்ட காரணங்களைக் கருத்திற் கொண்டு பலர் இது சம்பந்தமான எதிர்க்கருத்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஆகஸ்ட் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.